# தமிழ்ப் பொழில்

துணர்-௰௮, மலர்-௰௧

சித்திரபானு—மாசி

(1943, ப்ப்ரவரி)

பொழிற்றொண்டர்:

கரந்தைக் கவியரசு

R. வேங்கடாசலம் பிள்ளை

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

46

# தமிழ்ப் பொழில்

சித்திரபானு—மாசி துணர் ௧௮—மலர் ௧௧. 1943—பிப்ரவரி

## உள்ளுறை

1. பொழிற்றொண்டர் குறிப்புக்கள் 359

2. தமிழ் வேற்றுமை மரபு
திரு. S. சோமசுந்தரபாரதியாரவர்கள், எம். ஏ., பி. எல். பசுமலை 363

3. அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா
மேன்மைதங்கிய திருவனந்தபுரம் மகாராசா அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு 368

4. மலைபடுகடாம் எனப்படும் கூத்தராற்றுப்படை
வித்துவான். திரு. சி. இலக்குவர், B. O. L., தமிழாசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு 373

5. திருக்கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி
வித்துவான். திரு. T. சிவப்பிரகாசச் சேதிராயர் அவர்கள், தமிழாசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு 377

6. பாத்தூண்
திரு. K. சோமசுந்தரம்பிள்ளையவர்கள், B.A., B.L. தஞ்சை 382

7. செஞ்சிக் கோட்டை
வித்துவான். திரு. மா. இராசமாணிக்கம் அவர்கள். B.O.L. தமிழாசிரியர், சென்னை 389

8. திருப்புறம்பயக் கல்வெட்டுக்கள்
திரு. T. V. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள், ஆராய்ச்சியாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 393

9. நன்கொடைகள் 398

Printed by the Co-operative Power Press, Tanjore, Limited, Karuntattamkudi, Tanjore, and Published by Karanthai Kaviarasu R. Venkatachalam Pillai, Karanthai Tamil Sangam, Tanjore.

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰அ } சித்திரபானு—மாசி 1943—பிப்ரவரி { மலர் ௰க

## பொழிற்றொண்டர் குறிப்புக்கள்

### அருட்டிரு ஞானியார் அடிகள் திருநாள்.

தமிழ் தழைக்கச் சைவம் சிறக்கத் தமிழகமுழுதும் எழுந்தருளிக் கற்றாரும், கல்லாரும் உளங்கொள வீறுபெறுவிரிவுரைகள் சீர்பெற மொழிந்து செந்நெறி காட்டிய அருண்மொழி நாவலர்கோன், அருட்டிரு ஞானியாரடிகள் இவ்வுலகிற் புகழுரு நிறீஇ, இறையடி கலந்த திருநாள், தைத்திங்கள் அ, கூ, ஆம்நாள் பூசம் சேர்ந்த வியாழக்கிழமை யன்றும், மறுநாளும் (21 22—1—43) கொண்டாடப் பெற்றது. முதல்நாட்காலை அடிகள் நிலையத்துக் கோயில்கொண்டுள்ள முருகற்கும், அடிகளின் ஒடுக்கத்திற்கும் நீராட்டும் வழிபாடும் நடந்தன. நண்பகலில் அடியவர் கட்கு உடை, உணவு வழங்கப்பெற்றன மாலை, திவான்பகதூர் திருவாளர் T. M நாராயணசாமி பிள்ளையவர்கள் சீரிய தலைமையில், திரு. வி. கலியாண சுந்தரமுதலியார் அவர்கள், அடிகள் திருவுருவப் படத்தைத் திறந்துவைத் தார்கள். பின்னர், செந்தமிழறிஞர்களாற் சீரிய சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. இரண்டாம்நாட்காலை அடிகளின் மாணவர்கழகக்கூட்டம் நடைபெற்றது. நண்பகலில், வேலூர் இராமமூர்த்தி குழாத்தினர் இன்னிசை வழங்கினர். மாலை, திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் அவர்கள் தலைமையில் அரிய விரிவுரைகள் நிகழ்ந்தன. முடிவில் அன்பர்கட்கு நன்றியும், இது போதுள்ள அடிகட்கு வாழ்த்தும் கூறப்பெற்று, இறைவணக்கத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

இரவு, ஞானியார் அடிகளின் திருவுருவப்படத் திருவுலாக்காட்சி சிறப்புற நிகழ்ந்தது.

## அரிய வெளியீடுகள்

### மெய்கண்ட சாத்திரம்

தமிழ் நாட்டின் தவப்பேருக விளங்கும் அருண்மடங்களில் ஒன்ருகிய **தருமபுர ஆதீனத்தின்** பேரருளால், இந்நூல் இதுபோது வெளிவந்துளது. 'மெய்கண்ட சாத்திரம்' சைவசித்தாந்தத்தின் நுண்மாண் பொருள்களையெல்லாம் எடுத்து விரிக்கும் பதினன்கு நூல்களைக்கொண்ட அரியபெரிய தொகுதியாகும். பண்டைக்காலத்தே இக்கலை நூல்களைப் பயிலும்புலவர்கள், எளிதில்எய்துதற்கியலாத இவைகளை, மிகமிக அரிதிற் றேடிப்பயின்று, பொன்னெனப்போற்றி வருவாராயினர். இத்தகைய அரிய கலையுணர்ச்சியால் மெய்ப்பொருளுணர்ந்து வீடுபேறுற்ருர்தாமும், இது காலை, இங்ஙனம் பதினன்கு கலையும் ஒருங்கு அழகிய வடிவில் வெளிவந்துளது, என உணரின் தாம்பெற்ற காட்சியினும் இதன் காட்சியை விழைந்து நிற்பர்!

தருமபுர ஆதீன மாபெருந்தலைவராய அருண்மூர்த்திகள் தங்கள் மடத்தினைச் சார்ந்த திருக்கோயில்களைச் செம்மைபெறப் புதுக்கி, பூசை, விழாச்சிறப்புக்களை இனிது நடாத்தி வருவதுடன், சமய வளர்ச்சிக்காய அரிய வெளியீடுகள் பலவற்றை வெளியிட்டும், தக்கார்களைக் கொண்டு விரிவுரைகள் இயற்றியும், சைவசமயத்தை வளர்த்து வருதலைத் தமிழுலகம் நன்கு அறியும். அடிகட்கு நம் பொழில், வாழ்த்தும் வணக்கமும் தெரிவிக்கின்றது.

இவ்வெளியீடு அச்சு நலங்களைச் செவ்விதிற்பெற்று அழகிய வடிவில் வெளிவந்துளது.

இவ்வெளியீட்டினைத் தமிழுலகிற்களிக்கத் துணைத்தொண்டராகிய திருவாளர், **மு. அருணசலம் பிள்ளை,** M A, அவர்கட்கும், இன்னனைய பல வெளியீடுகட்கெல்லாம் பொதுவகையிற்றுணைத்தொண்டராகும் சென்னைச் சைவசித்தாந்த மகாசமாச அமைச்சர், திருவாளர், ம. **சுப்பிரமணிய முதலியார்,** B.A., B.L., அவர்கட்கும் தமிழுலகம் நன்றி செலுத்தி, வாழ்த்தும் கடமையினது.

---

## கோவன் புத்தூர்

### கோனியம்மன் வரலாறு

சென்ற தை மலரில், திருச்செங்கோட்டுத் தலப் பெருமை மதிப்புரையில், தமிழ்ப் பேரறிஞர் **திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்** நூல் வெளியீட்டின் பெருமைகளை உணர்ந்தோம். இதுகாலை, அவர்கள்

வெளியீடாகிய கோனியம்மன் வரலாறு எனும் மற்றொரு நூலைக் காண் கின்றோம். இந்நூலும் அந்நூலைப் போன்றே அரிய காட்சிப்படங்கள், பலவகையான ஆராய்ச்சிகள், திருவிழா நிகழ்ச்சிகள் முதலிய பல சிறப்புக் களும் கொண்டு மிளிர்கின்றது. இதுகாலை தமிழ்ப் பேரறிஞர்களாகிய மக்களால், தம் தமிழ்த்தாய்க்குச் சமயஒளி மொழி யொளிகளைக்கொண்டு மிளிரச் செய்யப்பெறும் சிறந்த அணிகளில் இஃது ஒன்றாகும்.

---

**பழநி ஆண்டவர்**

**திங்கள் வெளியீடு**

இந்து அறநிலையக் காப்புக்கழகத்தினர், திருக்கோயில்களின் மேற் பார்வையாளர்கள், தமிழுலகப் பெருமடங்களின் மாபெருந்தலைவர்கள் ஆய இவர்கள், இதுகாலை, சமயத்திற்கும் தமிழ்மொழிக்கும் ஆற்றிவரும் அருந் தொண்டுகளை, அன்னவர்தம் நூல்வெளியீட்டின் பெருமைகளைக் குறிக்கும் முகத்தால், நம் பொழில் வெளியிட்டுளது. பழநிக் கோயில் மேற்பார்வை யாளர், திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ., பி. எல். அவர்களையும், சிவத்திரு. ஈசான சிவாசாரியார் அவர்களையும் புலவர் உலகம் நன்கறியும். இவ்விருவர்தம் பேரருளால், இதுபோது, பழநி ஆண்டவர் என்றதோர் திங்கள் வெளியீடு வெளிவருவது, தமிழுலகின் புதுப்பேறு ஆகும். இது அத்தலத்துப் பெருமானது அருட்செயல்கள், தல வரலாறு முதலியவற் றுடன் பொதுவகையாகத் திருக்கோயில் வழிபாட்டுமுறை, திருக்கோயில் அமைப்புக்களின் உண்மை முதலாய பலவற்றையும்கொண்டு வெளிவரும் அரிய திங்கள் வெளியீடாகும். இது தமிழ் மக்கட்கு எய்தும் புத்தமிழ்த மாகும். இதன் பெருமையைக் காட்டும் வாழ்த்து :—

"மன்பழநி யாண்டவர் மாண்பெய ரேற்றுலகில்
மன்பதைக ளுய்ய வருமடலே !—கொன்பெரிய
வேலோன் புகழ்போல் விரிந்துயர்ந் தென்ஞான்றும்
சாலநீ வாழி தழைந்து"

நாவலர், பண்டிதர், ந. மு. வே. நாட்டாரவர்கள்.

---

**புலவர் உலகம்**

**திங்கள் வெளியீடு**

கவிராச பண்டிதர், ஆசிரியர், செகவீரபாண்டியரைத் தமிழ்ப்புலவர் உலகில் அறியாதவர் இலர். தமிழ்த்தாய்க்குச் சிறந்த அணியியற்றி மிளிர்வார் பெயர் வரிசையில் அவர் தம்மைச் சேர்த்தது, அவர்கள் திருக் குறட் குமரேசவெண்பாவாகும். அதன்மேல், அவர்கள் புலவர் உலகத் திற்கு அளித்துவரும் புத்தமிழ்தம், புலவர் உலகம் எனும் சிறந்த திங்கள்

வெளியீடாகும். கம்பர் பெருமானின் கவிச்சுவையைத் தெள்ளிதின் எடுத்துவிரிக்கும் இவ்வெளியீட்டின் இரண்டாம் தொகுதி ஒன்பதாவது பகுதி, இதுபோது காட்சியளிக்கின்றது. இதன்கண், 'பரதன் பரிந்து புரிந்தது' எனும் தொடக்கத்தவாய், 'சுற்றத்தார் தேவரொடும்......பெரியாள்' என்னும் கம்பராமாயணச் செய்யுள் முதலாகப் பல செய்யுட்களின் நுண் பொருள்கள் அழகு ததும்ப எடுத்து விரிக்கப்பட்டுள்ளன. இந் நல்விருந்தினைத் தமிழ்மக்கள், ஒவ்வொருவரும் நுகர்ந்து என்றும் நிரம்பும் இன்புறுதற்குரியார். புலவர் உலகமாகிய இப்புத்தமிழ்து என்றும் இனிது வாழியர்.

---

**தம்பிரான் தோழர் தமிழ்ச் சங்கம், திருவாரூர்**

இச்சங்கத்தின் ஆதரவில் 25—1—'43-ல் நடைபெற்ற கூட்டத்தில் அடியிற்கண்ட எண்ணம் (முடிவு) ஒரேமனதாய் நிறைவேறியது.

சுயமரியாதைச் சங்கத்தார் சேலம் மகாநாட்டில் பெரியபுராணம், கம்பராமாயணம் முதலிய தமிழிலக்கியங்களைக் கொளுத்திவிடவேண்டியதென்று செய்தமுடிவை, இப்போது நிறுத்தி வைப்பதாகவும், பின்னர் அது எங்கும் ஒரேகாலத்தில் நடைபெறும் என்றும் செய்துள்ள தீர்மானத்தை இச்சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. அந்த முடிவை அடியோடு நிறுத்திவிடவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறது.

---

**துயரம்**

பெண்ணுகடம், வித்துவான், **திரு. சிவகுருநாத பிள்ளையவர்கள்** திருவையாற்று அரசர் கல்லூரியில் முறையாகப் பயின்று, வித்துவான் பட்டத்தில் முதன்மையெய்தி, கள்ளக்குரிச்சி உயர்தரப்பாடசாலையில் தமிழ் ஆசிரியராக விளங்கினர். கற்கும் காலத்தே, நுண்ணறிவு, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, சமயப்பற்று, ஆசியர்பால் வணக்கம் முதலாய பல உயர்ந்த குணங்கள் வெளிப்பட மிளிர்ந்தனர். இப்பால், விரிவுரைத்திறன், செய்யுள் இயற்றுந்திறன் முதலாய புலமைத் துறைகளில் தலை சிறந்து நின்றனர். ஆண்டில் இளைஞராயினும் அறிவினும் தமிழ்த்தொண்டினும் சிறந்து வளர்மதி யெனத் திகழ்ந்து வந்த இவர், இதுபோது இறையடி எய்தினர் என்ற துயர்ச் செய்தி, தமிழ் மக்கட்குப் பெருங் கலக்கம் தரும் செய்தியாகும். இவர்களை இழந்து துயரக் கடலில் ஆழும் இவர் தம் உற்றார், நண்பர், ஆசிரியர், அரிய மாணவர்கட்குத் தமிழ்த்தாய் ஆறுதல் அளிப்பாளாக.

51

# தமிழ் வேற்றுமை மரபு

திரு. S. சோமசுந்தர பாரதியாரவர்கள், எம். ஏ., பி. எல். பசுமலை.

"தமிழில் முன் வேற்றுமை கிடையாது; பின் வடநூலிலிருந்து இரவல் வாங்கியது. அதனால், தமிழ் மொழியில் பொருளால் வேற்றுமை எட்டிற் பலவாகவும், வடமொழியிற் போலவே, தமிழிலும் வேற்றுமைகள் எட்டெனக்கொள்ளவும், அவற்றை எண்வரிசையாற் பெயரிடவும் நேர்ந்தது; அது பொருந்தாது", எனத் தாமெழுதிய "மொழிநூலில்" பன்மொழியறிஞர் "கால்டுவல்" கண்காணிப் பாதிரியார் கூறினர். அதைப்பின்பற்றி, இன்றுவரை, பலரும் வேற்றுமைவகை தமிழுக்கு வடமொழிதந்த நன்கொடையென்ற கொள்கையை நம்பிப் பரப்புகின்றனர். விவிலிய மறையோர் கால்டுவல் அறிஞர் தாமே தென்மொழி வடமொழிநூல் கற்றுத் தேறிய முற்றறி புலவரெனக் கருதுதற்கில்லை; அவர் அக்காலப்பண்டிதரும், பிற்காலச் சின்னூல்களும் பகர்ந்தன கொண்டு, தன்னறிவிற்றோன்றியதைத் தொகுத்தெழுதியதே "திராவிட மொழிநூல்". அது, மேலாராய்ச்சித் துணையாதற் குதவும். அதிற்காணும் கருத்தனைத்தும் முடிவடைந்த துணிபுகளாய்க் கொள்வது நம் குற்றமாகும். வேற்றுமைகள் தமிழுக்குத் தனியுடைமை யாகாதென்பதற்கு அவர் கூறும் ஏதுக்கள் இரண்டேயாம். வடமொழி போல் தமிழிலும் வேற்றுமைகள் எட்டெனவே கொண்டதொன்று; மற்றொன்று, வேற்றுமைப் பெயர் தமிழிலும் எண்வரிசையால் இயையக்கண்டது. இவ்வேதுக்களைச் சிறிதாராய்தல் பொருத்தமாகும்.

முதலில், ஒரு பெருநாட்டிருதனித்தொன்மொழிகளிலே, வேற்றுமைகள் எட்டென்றுகொண்டதனால், ஒருமொழி மற்றதனிடத்து அதைப் பெற்றதெனத் துணியொண்ணது. பரந்த வுலகில் பண்டைமொழி பலவோடும் இனமில்லாப் பிற்கால மொழி பலவும் வேற்றுமைகள் எட்டாகக் கொள்ளக் காண்போம், இலத்தீன், யவனம், எபிரேயம், பாரசிகம் போன்ற தம்முட்டொடர்பற்ற மொழிகளிலும் வேற்றுமைகள் எட்டேயெனக் காண்கின்றோம். அவ்வொன்றுனே அவைகட்கெல்லாம் நாவலநாட்டாரியமொன்றே வேற்றுமையை நல்கினதாய்க் கூறுதற்குத் திராவிட மொழி நூலுடையாரும் மொழியியல்கள் ஆராய்வார் யாவருமே துணியமாட்டார்கள். அன்றியும் வடமொழியில் நூல்வல்லார் எல்லோரும் வேற்றுமைகள் எட்டென்றுகொள்ளவில்லை; பாணினிபோல் ஏழென்று கூறுபவர் பலராவர். வடமொழிநூற் கொள்கை யாதாயினுமாகுக; தமிழில் வேற்றுமைகள் ஏழேயாம். இதுவே முன் ஆன்ற தமிழ்ச் சான்றோர்கள் துணிந்தவுண்மை.

"வேற்றுமைதாமே ஏழெனமொழிப" (தொல்—சொல்—சூ 62) எனத் தமிழ்த்தொன்னூலார் நன்மரபைத் தொல்காப்பியர் முன்னர்க்

கூறினர். பின்னர்,இந்திரன்றன் வடநூல்முடிபு தழுவி,எழுவாய்ப்பெயரை, முதல்வேற்றுமையென்று அவர் எண்ணியதால், விலக்கொணுவிளிவேற்று மையைக் கூட்டி "விளிகொள்வதன்கண், விளியோடெட்டே" என வேறு கூறல் நேர்ந்தது. "ஏழென மொழிப" என்றது "பிறர் மதங் கூறல்" என்பர் உரைகாரர்; அம்மதங் கூறும் பிறர்யாரென்றொருவருமே விளக்கு கிலர். இதுபோது வழங்கும் தமிழ் நூல் எதுவும் ஏழென்று கூருமை யால், "மொழிப" எனத் தொல்காப்பியராற் சுட்டப்பெற்ருேர், அவருக்கு முன்னிருந்த தமிழ்ச் சான்ருேராதல் ஒருதலை. வேற்றுமை "ஏழியல் முறையது'.........என்ருேதிய பாணினியும், எட்டென்றெண்ணிய இந்திர னும், வடமொழி யிலக்கணம் வகுத்தவராதலின், அவர் கூற்று. தமிழ்மரபு தழுவாது. ஆதலால், தமிழ் வேற்றுமை வகையைத் தமிழ்நூல்கொண்டே துணிதல் வேண்டும். "ஏழெனமொழிப"வர் தொல்காப்பியருக்குமுந்திய பண்டைத் தமிழ் நூலாராவரன்றி வடநூலாசிரியராகார் என்பது தேற்றம்.

தொல்காப்பியர் ஐந்திரம் நிறைந்தவராதலின், அவ்விந்திரன் மதம் தழுவி "விளியோடெட்டே" எனத் தங்கோள் கூறி, அதிற்கியைய "அவை தாம், பெயரே-ஐ-ஒடு-கு-இன்-அது-கண்-விளி-என்னுமீற்ற" என் றெட்டையும் நிரலே ஒப்ப நிறுத்தி எண்ணிக் காட்டினர். அதற்குமாருக அவர் விளிவேற்றுமையின் சிறப்பின்மை விளக்கியதாயும், தனியுருபும் பல பொருளும் பிறவேற்றுமைபோற் கொள்ளாத விளியைப் பிரிப்பதற்கே "விளிமரபு" வேறு கூறப்பட்டதாயும் உரைகாரர் உரைக்கின்ருர். விளிக்குப் பலவுருபும் வேறுபொருளும் ஒரு தனியியலால் தொல்காப்பியர் விரிப்பதனுல். அவர் விளிக்குச் சிறப்பின்மை தெளிப்பதற்கு மாருக அதன் சிறப்புடைமை விளக்குவது வெளிப்படை. பெயர் நிலையே தன்னிலையாய் உருபெதுவும் இன்றிப் பெயர்ப்பொருளன்றிப் பிறிதுபொருள் யாதுமில் லாத எழுவாயை வேற்றுமையாய்ப் பழைய தமிழ் முதல்நூலார் கருதாமை கண்கூடு. பொருள்சுட்டலும் பயனிலைகோடலும் உருபேற்றலும் பெயர் களின் பொதுவியல்பு. அற்றன்றிப் பிறிதியல்பில்லாததும், பிறவேற்றுமை போல் தனக்குருபும் தனிப்பொருளும் கொள்ளாததுமானதைப் பெய ரென்றும் எழுவாயென்றும் கூறுவதே தமிழ்மரபு. எவ்வகையானும் பெயரின் வேறுபடாததைப் பெயரென்பது முறை; வேற்றுமை என்பது பொருந்தாது. உருபாலும் பொருளாலும் பெயர்கள் வேறுபடுவதே வேற்றுமை எனப் பெறும். பெயர்தோன்று நிலையே தன்னிலையாய்ப் பிறவுருபேற்றுப் பொருளும் வேறுபடுதற்கிடமாவதை "எழுவாய்" என் பது நன்மரபு. ஐ முதல் ஏழு வேற்றுமையும் தோன்றுவதற்கிடமாவது எழுவாய்; அதுவேபெயர். எழுவாய்ப் பெயர்க்கென உருபில்லை. பொருள் வேறுபாடும் யாதுமில்லை. பெயர்ப் பொருளே எழுவாய்ப் பொருள். பொருண்மைசுட்டலும் பயனிலை கோடலும் உருபேற்றலும் காலங் தோன்ருமையும் பெயர்களின் பொதுவியல்பு. எழுவாயியல்பும் அங்

நான்கே. எழுவாய் (2) "பொருண்மை சுட்டல்.........அன்றியனைத்தும் பெயர்ப் பயனிலையே" (தொல்-பெயர்-சூ. 66) என்பதனுலும், (3) உரு பேற்றல் உருபு நிலைதிரியாது பெயர்க்கீருகும்" (சூ. 69) என்பதனுலும், காலந்தோன்ருமை" பெயர்நிலைக் கிளவி காலந் தோன்ரு (சூ. 70) என் பதனுலும் விளக்கமாகும். எனவே, பெயரே எழுவாயும் எழுவாயே பெயருமாதலின், எழுவாயைப் பெயரின் வேறுபட்டதொரு வேற்றுமை யாகக் கூறல் பொருந்தாமை ஒருதலை.

இனி, வடமொழியில் பெயர்ச்சொல் தமிழிற்போல, நின்ருங்கே வேற்றுமையாகாது; பெயர்ச்சொற்கள் தம்வடிவம் மாறியே அதாவது உருபேற்றே எழுவாயாகும். அவ்வாறு எழுவாயும் பிறவேற்றுமை (விபக்தி)கள் போலவே இயற்பெயர் நிலையின் வேறுபடுதலால், ஆரிய நூலார் அதையும் வேற்றுமை எனக் கொண்டது தவருகாது. அதனுல், இந்திரன் முதலிய ஆரிய முன்னூலார் எழுவாய்ப்பெயரை முதல்வேற்று மையாக்கி, அதனேடு பிற ஏழும் கூட்டி வேற்றுமை எட்டென்றெண்ணி னர். ஏழே வேற்றுமை என்ற பாணினிபோல்வார் மதமும், விளியை எழுவாய்த் திரிபென விலக்கிற்றல்லால், எழுவாய்ப்பெயரை வேற்றுமை யென்றே கொண்டது கருதத்தக்கது. வடநூலார் எழுவாயையும் வேற் றுமை என்றது அம்மொழியியல் மரபுபற்றி எழுந்தது. தொல்காப்பியர் தமக்கு முந்துநூற்றமிழ் மரபு தழுவி ஏழென முதலிற் கூறினர். எனினும் தொல்காப்பியர் ஐந்திரம் நிறைந்தவராதலின் அந்நூற் சார்பால் எழுவா யை வேற்றுமையாகக் கொண்டதானும், தமிழில் விளியைப் பெயர்த்திரி பென விலக்கொணுமையானும், "விளியோடெட்டே" என்றதையும் கூட்டிக் கூறினர். தமிழில், விளி, உருபாலும் பொருளாலும் பெயரின் வேறுபடுவதால், அது, வேற்றுமையாதல் தேற்றமாகும். மற்றெல்லா வேற்றுமைகளையும் இரு சிற்றியல்களில் விளக்கி யமைத்த தொல்காப்பி யரே விளியை வேற்றுமையெனக் கூறியதோடமையாமல், விளிக்குமட்டும் அதன் சிறப்பு நோக்கி "விளிமரபென நெடிய தனியியல் வகுத்தனர். பிறவேற்றுமைகளுக்கெல்லாம் ஒவ்வோருருபே கூறியவர் விளிக்குப் பல வேறுருபும் அவற்றிற்குத் தனிக்குறிப்பும் விரித்து விளக்கினர். அதற்கு முரணுக, வடநூல்வல்ல உரைகாரர் "விளியின் சிறப்பின்மை விளக்கிய" அதற்கு வேறியல் வகுக்கப்பட்டதெனக் கூறியது அவர் பயின்ற பாணினி போன்ற பிற்கால வடநூலார் முறை தழுவி என்பது தெளிவாகும். ஆகவே, தமிழில் (1) பெயரே எழுவாய் என்பதும் (2) அதை வேற்றுமை என்றல் தொன்மரபன்றென்பதும், (3) ஐ முதல் விளியீருக வேற்றுமை ஏழென்பதும் விளக்கமாகும். இம்முறையில் இயலடைவில் தமிழ்வேற்று மை ஏழேயாம். அவற்றின் பெயர்முறை "ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி, என்றேழாகும். ஆகையால், வேற்றுமை எட்டெனவும், அவை எண்முறையாற் பெயர்பெறுமெனவும் கூறும் ஆரிய நூற்கோளால், உருபாற் பெயர் பெறும் வேற்றுமை ஏழேயுடைய தமிழ்மரபு பிறந்த

தெனும் மேற்புலப்புலவர் கால்டுவெல் ஐயர் கூற்றுப் பொருந்தாமை ஒருதலை.

இனித்தமிழர் முன்வேற்றுமையில்லாதிருந்து பிறகு ஆரியரிடமதைக் கொண்டனரென்பது வரலாற்றுச் சான்று பெறுததோடு, மொழி நூல் முறையினும் உண்மையில்லாதது. தம் கூற்றுக்குக் கால்டுவல் ஐயர் சொல்லும் இரண்டாவது காரணமுற்றிலும் தவறு. இந்திய ஆரியத்தில் வேற்றுமைகளை எண்முறையாற் பெயரிட் டமைத்திருப்பதுண்மை. பிரதமை (ஒன்றுவது) முதல் சப்தமி (ஏழாவது)வரை எண்களே அம்மொழியில் (விபக்தி) வேற்றுமைகளின் பெயராக வழங்கிவருவது யாவரு மறிந்த செய்தி, எனில், தமிழில் வேற்றுமைகள் எண்ணுற்பெயர் பெற்றனவென்பார் தமிழ்நூன் மரபறியார் என்பது ஒருதலை. ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி என்பன தமிழில் வேற்றுமை ஏழன் பெயர்களாகும். அவற்றை எண்ணுங்கால், எழுவாயை முதலிலும், ஐமுதல் விளியிறுக ஏழையும் இரண்டுமுதல் எட்டுவரை எண்வரிசையில் வைத்தும் எண்ணுவர். அவ்வாறெண்ணுவதால் அவ்வெண்களே வேற்றுமைகளின் பெயரெனக் கொள்ளுதல் தவறாகும். மேனாட்டு யவனம் இலத்தீன் இடைநாட்டெபிரேயம், கீழ்நாட்டுச்சீன முதலிய பழையமொழிகளிலெல்லாம் தொன்றுதொட் டின்றுவரை வேற்றுமைப் பெயர்முறைகள் வெவ்வேறாயினும் அவற்றை எண்ணுமுறை இதுவாகவே இருக்கக் காண்போம். செய்யும் பொருளை முதலிலும், செயப்படுபொருளை இரண்டாவதும், துணையல்லது கருவிப் பொருளை மூன்றாவதும், பொருட்டுப்பொருளை நான்காவதும், இன் அது-கண்-எனப்பெறும் நீக்கம்-உடைமை-இடப்பொருள்களை முறையே ஐந்து ஆறு ஏழாகவும் எண்ணுவதே எல்லா மொழிகளிலும் ஓராங்கு இயலும் நன்மரபாயமைந்துள்ளது. இதனால் அம்மொழிகளில் வேற்றுமைப் பெயர்கள் அவ்வெண்கள் என மொழிநூன் மரபறிவார் யாருங் கொள்ளார்.

தொல்காப்பியர் நாலிலும், வேற்றுமைப் பெயர்கள் மேற்கூறியாங்கு எழுவாயோடு ஐ முதல் விளியிறுக எட்டேயாம். எண்ணுங்கால் அவற்றை ஒன்றுமுதல் எட்டுவரை வரிசையாய் எண்ணினர் தொல்காப்பியர். வேற்றுமையாகா எழுவாய்ப் பெயர்முதல், "ஐ" யெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" "ஒடு" வெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி "கு' வெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி, "இன்" னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி, "கண்" ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி, "விளியெனப் படுப" என வேற்றுமையெல்லாம் அதனதன் உருபுக்குறியைப் பெயராய்க் கொண்டு வழங்குவதே பிறழாத பண்டைத் தமிழ் மரபென்பதைத் தொல்காப்பியர் தம்நூலில் தெளித்து விளக்கியுள்ளார். அவற்றை வரிசைப் படுத்துமிடத்து, ஐ முதல் கண் வரை ஆறும் முறையே இரண்டாகுவதே, மூன்றாகுவதே, நான்காகுவதே, ஐந்தாகுவதே, ஆறாகுவதே, ஏழாகுவதே, என்றெண்ணப் பெறும் எனவும் குறித்தனர். இவ்வெண்கள் வேற்றுமைகளின் பெயராகா; அவற்றிற்கின்றியமையாத் தொடர்புங் கொள்ளா. ஒடுவை ஐந்தாவதும், இன்னை மூன்றாவதுமாக எண்ணுவதெனத் தமிழ் நூலார் துணிவரேல், அதனால் மட்டும் அவ்வேற்றுமைகளினியல்பும் உருபும் பொருளும் முடிபும் திரியாதியலும். உருபுகளே வேற்றுமைகளின் பெயரும் விளக்கமுமாய், அவற்றின் உயிராய் நின்றியக்குவன; எண் அவற்றிற்கு உறுப்பாகா; வரிசைக்குறியே. வேற்றுமைத் தொகுதியை

ஏழாவதொரு வரிசைப்படுத்தி யெண்ணல் வேண்டும். அதனால் எழுவாய் பெயர்முதல் பிற வேற்றுமைகளின் இயலியைபின் நெருக்கும் நெகிழ்வுங் கருதி வைப்புமுறை எண் வரிசையில், பிறமொழிபோல், தமிழிலும் அமைந்துளது.

முன்னைய தொன்னூல்களில் இவ்வுண்மையை ஐயந்திரிபறத் தெளித் திருக்கவும், நன்னூல், இலக்கணவிளக்கம் போன்ற பின்னூல்களில் வேற் றுமையியல் விரிக்குமிடத்து, நிறுத்தசொற் பெய்யாது நெகிழக் கூறிய தனால், எண்களே வேற்றுமைப் பெயரென நினைக்க நேர்ந்ததுபோலும். நன்னூலார் ''எட்டே வேற்றுமை'' எனக்கூறி, பிறகு "இரண்டாவத னுருபையே" ''மூன்றா வதனுருபு ஆல் ஆன் ஒடொடு" என்றிவ்வாறே தொடர்ந் தெண்ணி, எட்டனுருபே எனமுடித்துக் கூறியதால், தொன் னூல்களில் தோய்ந்து துருவி யாராய்ந்து பயிலாதார், எண்களே வேற்று மைகளின் பெயரெனவும், ஐ முதலிய, அவற்றிற் குருபுகளாய் மட்டும் அமைவன எனவும் கருதலாயினர். எட்டே வேற்றுமையென்ற பின்னூ லாரும், வேற்றுமைகளின் பெயருமுறையுங் கூறுமிடத்து. எண்கொண்டு சுட்டாமல், ''பெயரே, ஐ, ஆல், கு, இன், அது, கண், விளி யென்றாகும் அவற்றின் பெயர் முறை'' என்றே விளக்குதலானும், உருபால் வேற்று மைக்குப் பெயரிடும் தமிழ் நன்மரபு வலியுறுதல் கண்கூடாம்.

இனி, முழுமுதலாய் வடித்தெடுத்த இயலமைந்து எழில்நிறைந்த பண்டைப் பெருமொழிகளில், வேற்றுமைகள் பெயர் கொள்ளுமுறை முத்திறப்படுகின்றன:—எண்ணாற் பெயர் கொளல், பொருளாற் பெயர் கொளல், உருபாற் பெயர் கொளல், எனுமிவை மூன்றே, ஆற்றல் நிறைந்த மக்கள் மொழிகளில் வேற்றுமைப் பெயர் முறையாயிருக்கக் காண்பாம். எண்ணாற் பெயர் கொளல், வடமொழிபோன்ற சில மொழியியல்பு; பொருளாற் பெயர் கொளல், இலத்தீன் முதலிய மேல்புல மொழிமுறை. உருபாற் பெயர் கொளல், அடிப்பட்ட தமிழ்மரபு. இவற்றுள் எண்முறை வேற்றுமைப் பெயர்களுக்கு இன்றியமையாத இயற்றொடர்பு ஒருதலை யின்மையால், சிறந்ததன்று. பொருண்முறை ஒருவகையால் முன்னதிற் சிறந்ததெனினும், வேற்றுமை யொவ்வொன்றும் பலவேறு பொருளுடைத் தாதலின், அப்பொருள்களை விதப்பின் பற்பலவகைகளாய் விரிந்து விரவி வரையறுத்துப் பெயரிடுதல் கூடாமையின், அதுவும் ஒருதலையாய்ச் சிறந்த தெனத்துணிய வொண்ணாது. ஆதலின், ஆன்றோர் அவ்விரு முறைகளினும் அடிப்பட்ட உருபுகளால் வேற்றுமைகளுக்குப் பெயரிடுதல் இயலடைவில் ஏற்றதெனத் தோற்றக் கண்டார். தம்முட்டொடர்புடைய பல பொருட்கு மொரு குறியாயமைந்து நிற்கும் ஒவ்வோருருபும் அவ்வப்பொருட்டொகுதி வேற்றுமைக்குப் பெயராயமைய, ஐயமும் மயக்கமும் அகன்று எண்மையும் தெளிவும் ஒண்மையோடெழிலும் ஒருங்கியைந்தொளிரும். இச்செம்முறை யால் வேற்றுமைப் பெயர்முறை யாப்புறவமைந்த மொழிநூன் மரபுடைமை தமிழ் மொழியின் தனிச்சிறப்பாம்.

# அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா

## மேன்மைதங்கிய திருவனந்தபுரம் மகாராசா அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு*

*அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து மேன்மைதங்கிய அத்தியட்சரவர்களே !*
*பேரவை அங்கத்தினர்களே ! பட்டதாரிகளே !*

இந்த முக்கிய தாபனத்து இவ்வாண்டுப் பட்டதாரிகளின் முன் பேசும்படி, என்னைக் கேட்டதற்காக, மேன்மைதங்கிய அத்தியட்சரவர்களுக்கு எனது நன்றியை முதலில் செலுத்திக்கொள்கிறேன்.

இந்தப் பல்கலைக் கழகத்தைக் காணவரும் ஒருவருக்கு, முதலில் அவர் உள்ளத்தைக் கவர்ந்து நிற்பது, இது அமைந்திருக்கும் தலமேயாகும். தென்னாட்டுப் புண்ணிய 'க்ஷேத்திரங்களில்' சிதம்பரம் ஒன்றாகும். வியாக்கிரபாத முனிவரும் மற்றும் எண்ணிறந்த அடியார்களும் கண்டு வணங்க, நடராசப்பெருமான் ஆடல் புரியும் ஐம்பெரு மன்றங்களும் இங்கே உள்ளன. நந்தனார் தமது அளவுகடந்த பத்தியைக் கொண்டு, பிறப்பினால் வரும் இடுக்கண்களையும் 'துவேஷங்களை'யும் அறவே களைந்தெறிந்து இறைவன் முன்னிலையில் மனிதர்கள் அனைவரும் சமமே என்பதை வெளிப்படுத்திய புராணக் கதை, இந்த நடராசப் பெருமான் திருக் கோயிலில் நிகழ்ந்ததொன்றாகும். இந்தப் புராதன வரலாற்றோடுகூட நடராசரும் கோவிந்தராசரும் ஒரேயிடத்தில் காட்சியளிக்கும் தத்துவம் நம் நாட்டு இளைஞர்களுக்கு அவர்களுக்கு மிகவும் தேவையாகவுள்ள ஒற்றுமை, சமரசம் இவற்றின் மகிமையை நன்கெடுத்துப் போதிப்பதாகும்.

இந்தப் பல்கலைக் கழகம் இன்னுமொருவிதத்தில் தனிப்பெருமை வாய்ந்தது. அஃதாவது இது தனிப்பட்ட ஒருவருடைய நன்கொடையால் திகழ்வதாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற செல்வம் நிறைந்த தேசங்களில் இவ்வித நன்கொடைத் தாபனங்கள் பல இருக்கின்றன. 'கார்னல்', 'ஜான்ஹாப்கின்ஸ்', 'லீலண்ட் ஸ்டான்போர்டு', இன்னும் சமீபகாலத்தில் 'ராக்பெல்லர்', 'ட்யூக்' ஆகிய இவர்கள் பெரிய நீண்ட நோக்கம் படைத்த வள்ளல்கள். அவர்களுடைய கொடைச்சிறப்பின் பரப்பையும் தன்மையையும் அறிவதற்கு 'ராக்பெல்லர்' அளித்த 3,50,00,000 டாலர்களையும், ஸ்டான்போர்டு என்பவர் நன்கொடையாக கலிபோர்னியாவில் கொடுத்த 90,000 ஏக்கர் நிலத்தையும் ஒருவர் நினைத்துக் கொண்டால் போதும்.

இந்தியாவில் கல்வி வளர்ச்சிக்கான நன்கொடைகள் அதிகமாக ஏற்படவில்லை. மாணவர்களுக்கு அளிக்கும் உபகாரச் சம்பளங்களின் விடயத்தில் கூட சமீபகாலத்தில்தான் பாலிட், தாகூர் இவர்கள் செய்த

*இக்கட்டுரையின் நடை, இதன் முதற் கட்டுரையைப் பெரிதும் தழுவியது.

தைக் கண்டு, அதன்படி நடத்தல் ஆரம்பித்திருக்கிறது. ஆகையால் நான் ராஜா ஸர் அண்ணுமலைச் செட்டியாரவர்களைச் சிறப்பாகப் பாராட்டுகிறேன். அவர்கள் தங்களுடைய முன் யோசனையினுலும், ஆய்ந்தறிந்த வண்மையினுலும், இந்தப் பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கு உதவி செய்துள்ளார்கள். இன்னும் நான் தெரிந்துகொண்ட அளவில் அவர்கள் வேறு ஒன்றையும் கருதாது, மற்ற இடங்களில் பல்கலைக் கழகங்கள் ஆற்றிவரும் வேலைகளோடுகூட இப் பல்கலைக் கழகம் தாய்நாட்டுக் கல்வியையும் அருங்கலைகளையும் வளர்க்கும் செல்வச் செவிலியாகத் திகழவேண்டும் என்ற நோக்கமே உடையவர்கள். அவர்களுடைய இனத்தார்களும் குடும்பத்தார்களும் பரம்பரையாய் நடத்திவந்த தருமமுறையன்றி இவர்கள் செய்துள்ள இத்தருமம் உன்னதமான வரவேற்கத்தக்க நல்ல பலன்களை யளித்துள்ளது. ஒரே நிர்வாகத்தின் கீழ்ப் பல்கலைக்கழகத்தினவும், கலாசாலையினவுமான போதனைகளை இணைத்திருப்பதால் ஏற்படும் சிறந்த நலன்களெல்லாம் இந்தப் பல்கலைக் கழகம் கொண்டுள்ளது.

நாம் இப்பொழுது இதற்குமுன் இல்லாததோர் குழப்பத்தினிடையே இருக்கிருேம். நம் நாட்டு இளைஞர்கள் அவர்கள் அறிவை வளர்க்கும் பயிற்சியை முடித்து, பல்கலைக் கழகம் மாணவர்களுக் களிக்கும் ஆத்துமபல கவசத்தையும் கட்டுப்பாட்டையும் அடைந்து வெளிவந்ததும், அவர்களுக்கு முந்தியவர்களும் மூதாதையர்களும் காணுததோர் போரினிடையே செல்ல வேண்டியிருக்கிறது. தங்கள் முயற்சியில் வெற்றியடைந்ததற்காகப் பட்டதாரிகளை நான் பாராட்டுகிறேன். அதோடுகூட இதற்குமுன் இல்லாத எண்ணிறந்த பொறுப்புக்களும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் கூற விரும்புகிறேன். முன்னெல்லாம் இந்தியப் பல்கலைக்கழகங்களில் பயின்று வெளிவருவோர் கலாவிநோதர்களாகவும் எழுத்தாளர்களாகவும், 'குமாஸ்தா'க்களாகவும் விளங்குவதற்கே தேர்ச்சிபெற்றனர்.

எதிர்பாராத விதமாய் உலகில் திடீரென்று கைத்தொழில்களும் விஞ்ஞான நூல்களும் வளர்ந்து, பல ஆண்டுகளாக, இயந்திரக்கலை, விஞ்ஞான கலை, தத்துவக்கலை இவற்றுள் எதன் நலம் சிறந்தது என்ற விவாதம் நடந்துவந்தது. தத்துவக்கலைகளைப் புறத்தே தள்ளிக்கொண்டு, கைத்தொழிலாளியையும் ஆராய்ச்சியாளனையும் உயர்த்தி, இலக்கியக் கல்வியையும் அருங்கலைகளையும் தாழ்த்தும் நிலை சாதாரணமாய் ஏற்பட்டுவிட்டது. அதன் பலன் நன்ருக விளங்கியது, திடுக்கிடும்படியாகவும் முடிந்தது. விஞ்ஞான நூல்கள் பெரிய அதிசயங்களை உண்டுபண்ணி உலகத் தோற்றத்தையே நிரம்ப மாற்றியமைத்தன. காலம், தூரம் இவைகள் இல்லையாயின. புதிதான தேவைகள் அதிகம் உண்டாகி, அவைகளுக்குத் தக்க அமைப்புகளும் முறைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. எங்கும் போட்டி ஏற்படலாயிற்று. இந்தப் போட்டியின் பயனுக, உலகில் எங்கும் விற்கும் இடங்களையும் மூலாதாரப் பொருள்களையும் குறித்துச் சச்சரவுகள் ஏற்

## அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா

இந்தியாவைப் போன்ற எளிய நாடுகளில் பல்கலைக்கழகங்கள் தாங்கள் அமைக்கும் பாடத் திட்டங்களை ஒன்றைப் போலவே ஒன்றை அமைத்து வீணாக இரட்டிக்காமல், ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஒன்றுக்கொன்று மாற்றிக்கொண்டும், ஒவ்வொரு பல்கலைக் கழகத்தின் செயலும் மற்றொன்றிற்கு உதவியாய் அமையப்பெற்று தங்களுடைய முழு வருவாய்களினாலும், பொதுவாக உழைக்கும்படி அமைத்தல் நலம். யுத்தத்திற்கு முன் ஆசிரியர்களையும் மாணவர்களையும் மாற்றிக்கொள்ளும் வழக்கம் முக்கியமாய் வளர்ந்துகொண்டு வந்தது. ஆசிரியர்கள் பிரயாணம் செய்து கொண்டே பிரசங்கங்கள் செய்துவரவும், அவர்கள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் மாற்றப்பட்டுக் கொண்டிருந்தனர். 'பிரிட்டிஷ் சாம்ராச்சியத்துப்' பல்கலைக் கழகத்துச் சங்கமும், பிரஞ்சு அரசாங்கமும், 'கார்னிஜி கார்பரேஷன்' முதலிய தாபனங்களும் அருந்தொண்டாற்றி வந்தன; அவைகளின் வேலைகள் இப்பொழுது தடைப்பட்டது மிகவும் வருந்தத்தக்கது. இந்த முயற்சிகளின் அடிப்படையான கொள்கைகள் நமக்கு மிகுந்த நலன் அளிக்கக் கூடியவை. தற்கால நிலையில் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பல்கலைக் கழகமும் மிகவும் சிறந்த முறையில் எல்லாப் பாடங்களிலும் தானே பயிற்சி அளிப்பதென்பது முடியாது. விஞ்ஞான நூலில் ஒருபகுதியில் கூட ஆய்வுகூடமும் அதற்கு வேண்டிய வசதிகளும் எல்லாத் தாபனங்களுக்கும் ஒன்றுபோல அமைய முடியாது. ஆகையால் ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஒன்றுக்கொன்று மாற்றிக்கொள்வதும், கல்விபயிற்றும் முயற்சிகளில் ஒன்றையொன்று அனுசரித்து ஒழுங்குபட அமைவதும் அவசியம். இவ்வித முயற்சிகளின் பலன்கள் கல்வித்துறையில் மட்டிலும் அடங்குவதில்லை. அவை ஒருவரையொருவர் நன்கு தெரிந்து கொள்ளப் படாததால் ஏற்படும் குறுகிய கொள்கைகளையும், சாதிமத 'துவேஷங்களை'யும் ஒழிப்பதற்குச் சாதகமாகும். என் இராச்சியத்திலுள்ள பல்கலைக் கழகத்திற்கும் உங்கள் பல்கலைக் கழகத்திற்கும் இடையிலாவது இவ்வித சம்பந்தம் ஏற்படுவதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

அறிவு வளர்ச்சியோடு அருங்கலைகளிற் பற்று ஏற்படுவதுடன் மாணவர்களைத் தனித்தும் ஒன்று கூட்டியும், அவர்களுடைய நன்மையைக் கவனிக்க வேண்டியது மற்ற எவையும் விட அவசியமானது. திருவாங்கூரில் நாங்கள் மேல்நாட்டுவிளையாட்டுக்களில் தோன்றும் கூட்டுறவு உணர்ச்சியுடன் உள்நாட்டில் நமது முன்னோர்கள் விதித்துள்ள தேகப்பயிற்சி அப்பியாசங்களாகிய ஆசனங்கள், பிராணாயாமங்கள் முதலியவற்றையும் நியமித்துள்ளோம். இன்னும் உடற்பயிற்சி மட்டுமன்றி ஒற்றுமையும் கட்டுப்பாடுமாகிய உணர்ச்சிகளும் உண்டாகும் நிமித்தம் ஏற்பட்டுள்ள பல்கலைக் கழகப் பயிற்சிப் பட்டாளமும் (U. T. C.) தொழிலாளர் பட்டாளமும் இன்னும் அனேக கூட்டங்களும் ஏற்பட்டு, அவைகளால் பெரும்பயனுற எதிர்பார்க்கிறோம்.

இந்த யுத்தம் உலகத்தை எதிர்பாராத விதமாய்ப் பற்றிக்கொண்டிருக்கிறது. இந்தியா இதற்குச் சிறிதும் தயாராக இருந்ததில்லை. புதிய தேவைகளுக்குத் தகுந்தபடி நமது கைத்தொழில்கள் இப்பொழுது மாற்றியமைக்கப்படுகின்றன. நம்முடைய தொழில்களும் விஞ்ஞான நூற்கலைகளும் புதிய முறைகளுக்குத் தகுந்தவாறு மாற்றி யமைக்கப்படவேண்டும். நம்முடைய பொருள் நூல் அறிஞர்களும், படைவீரர்களும், மாலுமிகளும், ஆகாயப்படை வீரர்களும் நமக்கும் நமது பரம்பரைப் புகழிற்கும் பொருத்தமாகத் தங்களை நன்குணர்ந்து தங்கள் கடமைகளை எல்லா விதத்திலும் நன்காற்றி வருகின்றனர். இந்தியர்களுக்குள்ளே அஞ்சாத சகோதர உணர்ச்சியும் ஒருலக மக்கள் என்ற உணர்ச்சியும் உண்டாவதும், நம்முடைய எதிர்கால நிலையும் நம்முடைய மக்களின் கல்வி வளர்ச்சியைப் பொருத்தே இருக்கின்றன. இந்தப் பல்கலைக் கழகமும் இதுபோன்ற ஏனைய தாபனங்களும் இனி வரும் சந்ததியார்களைப் பொருத்தமான முறைகளிற் பயிற்றித் தங்களுடைய புகழ்வாய்ந்த பல்கிய அரிய பெரிய கடமைகளை இனிது நிறைவேற்றுவனவாக!

இந்தப் பல்கலைக் கழகத்தார் எனது அன்னைக்கும் எனக்கும் டாக்டர் பட்டமளித்ததற்காக எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கௌரவங்களை உண்மையாக நாங்கள் நன்கு மதித்து, இவற்றை நட்பின் அறிகுறியாக மட்டும் கொள்ளாது, கல்வித் துறையில் எதிர்காலத்தில் ஏற்படும் ஒத்துழைப்பின் சின்னமாகவும் கொள்வோம்.

61

# மலைபடுகடாம் எனப்படும் கூத்தராற்றுப்படை

வித்துவான் திரு. சி. இலக்குவர், B. O. L., தமிழாசிரியர்,
அரசர் கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி : துணர் ௰அ, மலர் ௬, பக்கம் 341)

**மக்கள்.**

செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் இயல்பினையுடையவர். இழைமருங்கறியா நுழைநூற்கலிங்கம் நெய்யும் வகையறிந்திருந்தனர். யானை குதிரை இவற்றைப் பழக்கி ஊர்தியாகக் கொண்டுலாவினர், தேரினும் சென்றனர். பூங்காவிற்றங்கிப் பொழுதுபோக்கினர். கரும்பினின்றும் சாறு எடுப்பதற்கு ஆலைகள் நிறுவ அறிந்தனர். புதுவழிகளில் போவார்க்கு புல் முடிந்து வழிகாட்டினர். பெண்களேயன்றி ஆடவர்களும் பூண்கள் பூண்டிருந்தனர். ஒருவனுக்கு ஒருத்தியும் ஒருத்திக்கு ஒருவனுமாக மணந்து இல்லற வாழ்க்கை நடாத்தும் பெற்றியில் நின்றனர். குழந்தை பிறப்பின் பெண்கள் வளையல்களைக் கழற்றிவிடுவர். கணவர் விழுப்புண்பட்டால் மனைவியர் பாடல்கூறி அப்புண்ணின் நோய்தணிப்பர். விடியற்காலையிலும் கள்ளுண்பர். பேரியாழும் சிறியாழும் கூத்தரும் விறலியும் இயக்குவர். கூட்டுவாத்தியமுறை (Orchestra) அறிந்திருந்தனர். கூட்டுவாத்தியங்கள்—1. மத்தளம். 2. ஆகுளி. 3. கஞ்சதாளம். 4. கொம்பு. 5. நெடுவங்கியம். 6. குறுந்தூம்பு. 7. குழல். 8. கரடிகை. 9. எல்லரி. 10. பதலை முதலியனவாம். ஆகவே இசையும் கூத்தும் நன்கு அறிந்தவர்.

அவர்கள் தனிப்பேராற்றல் வாய்ந்த கடவுளையறிந்து வணங்கி வழிபட்டு வந்தனர். அரன் என்றோ அரி என்றோ அயன் என்றோ பெயரிட்டிலர். துன்பம் வந்த காலத்துத்துன்பம் அகலவும், இன்பம் பெற்றகாலத்து இன்பத்தை யளித்ததற்கு நன்றியறிதல் தெரிவிக்கவும், இவ்வகையே இன்பவாழ்வு நடாத்த உதவியருளல் வேண்டுமெனவும், எதையும் தொடங்குவதற்கு அருளவும் கடவுளை வணங்கிவந்துள்ளனர். கடவுளுக்கு உருவம் கற்பித்ததாகக் காணப்படவில்லை. ஆகவே, கடவுளை அருவப் பொருளாகவே வணங்கி வந்துள்ளனர். ஆனால், கடவுளை வணங்குவதற்குக் காவல் அமைந்த இடம் கொண்டிருந்தனர்.

போரில் புறங்கொடாது உயிர்விட்ட வீரர்களை நடுகல்லிலே நட்டுத் தொழுதுவந்துள்ளனர்.

**கானவர்:**—மலைப்பக்கத்தில் சிறியகுடிகளில் உறைவர். அவர்கள் தேனையும், கிழங்கையும், ஊன் உணவையும் தாமுமுண்டு பிறர்க்கும் அளிப்பர். தசையைக் கொண்டு வருவதற்குத் தம்மில் பொருது மாண்ட யானைக்கோடுகளைப் பயன்படுத்துவர். நெய்யில் தசையைப் பொறித்துத் தினைச்சோற்றோடும் உண்பர். பிறர்க்கும் தருவர். அவர்களே காடுகளை

யும் காப்பர். வருந்தியவர்க்கு விரைந்து வந்துதவும் தன்மையர்.

**குறவர்:**–பலவகைத் தசைகளைக் கலந்துண்டு, தேறலை மகிழ்ந்து, பின்னர் நெல்லாற் சமைத்த கள்ளை உண்பர். பலாவிதையின் மாவையும் புளிச் சாற்றையும் கலந்து அளவாக வார்த்த உலை மோரில் துழாவியாக்கிய வெள்ளிய சோறுகிய உணவைத் தலையிலே பூச்சூடிய குறமகள் அளிக்கப் பெற்று உண்பர். விருந்ினரைப் பெற்றேம் என்ற மகிழ்ச்சியுடன், மக்கள் முறை சொல்லித் தடுக்க, உணவு அளிப்பர். பலநிறம் பொருந்தின பூக் களால் தொடுக்கப்பட்ட மாலைகளை அணிந்திருப்பர். அவர்கள் தங்கி யிருக்கும் ஊர் திருநாளையுடைய ஊர் போன்றிருக்கும். ஆங்குக் காண் டற்கினியவற்றைக் கண்குளிரக் கண்டு, செவிக்கினியவற்றைச் செவியாரக் கேட்டு, பல இனிய உணவை உண்ணலாம்.

**ஆயர்கள்:**—நிரையைக் காவல் சூழ்கின்ற ஆயர்கள் வளையலணிந் துள்ள மகளிர் மனமகிழும்படி ஆன்திம்பாலைக் கொண்டுவந்து சொரிவர். ஆங்குத் தங்குபவர்கட்குப் பாலும் பாற்சோறும், வந்தவர்க்கென்று சமை யாமல், அவர்க்கெனச் சமைத்தவற்றினின்றே அளிப்பர். படுப்பதற்கு மெல்லிய மயிரினையுடைய சேணமிட்ட படுக்கையொத்த, தோற்படுக்கை யைத் தருவர். கொடிய விலங்குகளைத் தடுத்துத் துரத்தவும், பனிக் குளிரைப் போக்கவும் தீக்கொளுவித் தருவர்.

**உழவர்:**—சண்பு நெருங்கின மருத நிலத்தில் வாளை, வரால் இவற் றினைச் சமைத்துண்பர்; கொடுப்பர். பகன்றைப்பூவாற் செய்த மாலையை அணிந்திருப்பர். உழவர்கள் நெல்லை முகந்து தராநிற்பர். ஆடாநின்ற சாடிகளினின்று பசிய முளையாலாக்கின கட்டெளிவை இளஞாயிறு தோன்றும் காலத்தும் அளிப்பர். தடிகளையிட்ட வெள்ளிய சோற்றை, சுற்றத்தோடு உண்ண அளிப்பர். எருதை ஓட்டுகின்ற உழவர் ஓசையோடு கூடும்படி, நல்ல யாழில் மருதத்தை மீட்டி இளைப்பாறிப் போவர் கூத்தர் முதலியோர்.

இதுகாறும் கூறியவாற்றால் வடவர் தென்னாட்டிற்கு வருவதற்கு முன்பு, சேய் நன்னன் காலத்து மக்கள் நிலை அறிந்தோம். இனி அச் சேய்மைக் காலத்து மக்கள் நிலையை அறிவித்த புலவர் நிலையை ஆராய் வோம்.

**பெருங்கோசிகன்:**—ஒரு பெரும்புலவர்—இயற்கையை யறிந்த இன் னிசைப்புலவர். ஏனைய ஆற்றுப்படைகளுடன் இவ்வாற்றுப்படையை ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, ஏனைய ஆற்றுப்படைகளை இயற்றியோர், அவர்கள் காலத்து நாட்டின் நிலையையும் தொல்காப்பியர் கூறியுள்ள திணைப்பாகுபாட்டையும் அவற்றிற்குரிய முதல் கரு உரிப்பொருள்களையும் அறிந்துகொண்டு அவர்கள் கூறப்போகும் வழிகளை நேரேகாணமலே

வீட்டிலிருந்துகொண்டே ஆற்றுப்படைகள் இயற்றியிருத்தல் கூடுமென நினைக்கக்கூடும். ஆனால் இவ்வாற்றுப்படையோ, கண்ணால் காணாது இயற்றுதல் இயலாது என்று கூறுமாறு வழியின் தன்மையைக் கூறும் போக்கு அமைந்துள்ளது. ஆகவே இப்புலவர் பெருமான் பல்குன்றக் கோட்டம் முழுவதும் சுற்றிப்பார்த்து இயற்கையின் இயல்பை அறிந்தவராய் இருத்தல் வேண்டும்.

தினைக்கொல்லை காப்போர் யானைமீது வீசும் கவண்கல் மேல்வந்து தாக்காவண்ணம் மரத்தில் மறைந்து செல்க என்றும், கான்யாற்று ஓரங்களிலும் குளக்கரை ஓரங்களிலும் இட்டிய சிறுநெறியில், பாசிபடர்ந்துள்ள வழுக்கு வழியில், ஒருவரைஒருவர் பிடித்துக்கொண்டும் சிறு மூங்கிற்கோல்களை ஊன்றிக்கொண்டும் செல்லுங்கள் என்றும், எடுத்து நிறுத்தன்ன சிறு நெறியில் செல்லுங்காலத்து. மயிலாடினும் கொம்புகளில் கடுவன் பாடினும் பெரிய தேன்கூடுகளைக் கண்டாலும் அவற்றைப் பார்த்துச்செலின் அடிதவறுதலும் கூடும் ஆதலின், அவற்றைப்பாராது செல்லுதல் வேண்டும் எனவும், செல்லும் வழியில் குறுக்கே பாய்ந்துள்ள புதரின் கொம்புகளை முன்னாற் செல்பவன் பிடித்து வளைத்து வழியாக்குங்கால், எல்லாரும் சென்றபிறகு வளைத்தகொம்பை மெதுவாக விடாவிடின், இன்னிசை நல்யாழ்ப் பத்தரையும் மண்ணார் முழவின் பக்கத்தையும் தாக்கிக்கெடுத்துவிடும் என்றும் எத்துணை அருமையாகக் கூறுகின்றார் !

வழிகளிற் காணப்பெறும் நிகழ்ச்சிகளைக் கூறப்புகுந்தவர், அருவிகளில் தெய்வமகளிர் குளிக்கும்போது உண்டாகும் ஓசை, தினைப்புனத்தில் புகுந்துதின்னும் களிற்றைப்பிடிப்பதனால் உண்டாம் ஆரவாரம், எய்ப்பன்றியால் தாக்குண்ட கானவர் அழுகை, கொழுநன்மார்பில் கொடுவரி பாய்ந்திட நெடுவகிர்விழுப்புண் தணிமார்காப்பென அறல் வாழ் கூந்தற் கொடிச்சியர் பாடல், வேங்கைப் பூவைப் பறிப்பார் ஓசை, களிற்றின் மேற் புலி பாய்ந்ததாகப் பிடி சுற்றத்தோடு அழும் அழுகை, குட்டியை இழந்த குரங்கின் கூட்டத்து ஆரவாரம், தேன் கூட்டை எடுக்கும் கானவர் உவகை ஒலி, பகைவர் அரண்களை அழித்த கானவர் மகிழ்ச்சிப் பேரொலி, குறவர் காலையில் கள்ளையுண்டுகளித்துச் சிறுபறையடித்துப் பெண்டிரோடாடும் குரவையொலி, ஆறுகள் தேரென ஓடி ஒலிக்கும் முழக்கம், மகளிர் தட்டையைப்புடைத்துக் கிளியை ஓட்டும் ஆரவாரம், காளையும் மரையான் ஏறும் சண்டையிட்டு வெற்றியுண்டாக்குங்கால் கோவலரும் குறவரும் செய்யும் ஆர்ப்பரிப்பு, எருமை ஏறுகள் பொருகின்ற கம்பலை, பலாவிதைகளை எடுப்பதற்குக் கன்றுகளைப்பிணைத்து ஓட்டும் சிறுவர்களால் உண்டாகும் ஓதை, கரும்பின் சாற்றைப்பிழியும் ஆலையின் ஓசை, தினையைக் குற்றுவார் பாடும் வள்ளைப்பாட்டு என்றிவற்றை யெல்லாம் கேட்டின்புற்றுக் கொண்டு செல்லலாமென்கின்றார். அம்மலைவழி, செல்வோர்க்குத் துன்பத்தைத் தராது விழாவைப் போல் மகிழ்ச்சியளிக்கும் என்கின்றார்.

தமிழர்கள் தமகருத்துள் மதித்ததற்குரியன என்று கருதுவனவற்றிற் கெல்லாம் கொடுத்து வழங்கும் அடைமொழியாம் 'திரு' என்ற சொல்லில் தொடங்குகின்றார், மாநிலத்தை வாழச்செய்யும் மழைக்கு அவ்வடை மொழிகொடுத்துச் சிறப்பிக்கின்றார். கூத்தரைக் கூப்பிட்டு வழியின் தன்மையைச் சொல்லப் புகுந்தவர், இன்னின்னவற்றைக் கூறப் போகின் றேன் என்று முதலில் சுருக்கிக் கூறிப் பின்னர் விரித்துரைக்கின்றார்.

உவமை :—அணிகளில் முதன்மையானதும் முதலில் தோன்றியதும் உவமையே. இப்பாட்டில் அவ்வுவமையணியைப் பரக்கக் காணுமாறு அமைத்துள்ளார். இவ்வுவமைகளை நோக்குங்கால், இப்புலவர் எத்துணை இயற்கை நுட்பமுடையவர் என்பது தெற்றென விளங்கும். அவற்றுட் சில காண்போம்.

கொண்டுபோகும் பொருள்களையிட்டுச் சுருக்கிக்கட்டிய பைக்கு, பலாக்காயையும், முசுண்டைப்பூவிற்கு ஆரல் மீனை(நட்சத்திரம்)யும், ஏனற்கதிர் பின்னியிருப்பதற்கு, பொய்ச்சண்டையிடும் யானைக்குட்டி இரண்டு தம் கைகளைப் பின்னியிருப்பதையும், அவரைப்பூவிற்கு விளைந்த தயிர்ப்பிதிரையும், வரகின்கதிருக்கு வாதிப்போன் கையையும், செங்காந்த ளுக்கு நெருப்பையும், வாசனைவீசும் மலைச்சாரலுக்கு திருமண வீட்டையும், குழந்தைகளின் தலைகளுக்கு செம்மறியாட்டின் தலைகளையும், கரிய ஏனத் திற்கு இருட்டுத்துண்டத்தையும், செம்மறியும் வெள்ளாடும் கலந்த ஆட்டு மந்தைக்குப் பண்டமாற்றுதலில் பெற்றுவரும் பலவகை நெல்லின் அரிசியை யும் ஒப்பிடுகின்றார். இயற்கையை உற்றுநோக்கும் புலவர்க்கன்றி மற்றையோர்க்கு இத்தகைய உவமைகள் அமைவது அரிதே.

இவ்வியற்கைப் புலவன் சீர் என்றும் நின்று நெடிதுவாழ்க. இக் கரந்தைச் சங்கத்தின் புகழ் மாதிரமெல்லாம் இயம்புக. புகழொடும் சிறக்க நம் வரைந்த நாளெனப் பரந்திடங் கொடுக்கும் விசும்புதோய் உள்ள மொடு வாழ்க நம் தமிழர்! வாழ்க நம் தமிழ் மொழி! என் சிற்றுரைக்கு இதுவரை செவிமடுத்த உங்கள் அனைவர்க்கும் என் மனமார்ந்த வணக்கம்.

65

# * திருக்கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி.

வித்துவான், திரு. T. சிவப்பிரகாசச் சேதிராயர் அவர்கள், தமிழாசிரியர்,
அரசர் கல்லூரி, திருவையாறு.

திருக்கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி யென்பது, பாண்டிய நாட்டி லுள்ள **கரிவலம் வந்த நல்லூர்** என்னும் பதியிற் கோயில் கொண்டிருக்கும் சிவபிரான்மீது வரதுங்கராம பாண்டியரால் இயற்றப் பெற்ற பிரபந்த மாகும்.

இவர், இந்நூலையன்றி, திருக்கருவை வெண்பா வந்தாதி, திருக் கருவைக் கலித்துறையந்தாதி, பிரமோத்தரகாண்டம் முதலிய நூல்களும் இயற்றியுள்ளார். அந்தாதிகள் மூன்றையும் அதிவீரராம பாண்டியர் இயற்றினரெனக் கூறுவாருமுளர்.

குலசேகரபாண்டியன் வேட்டையாடச் சென்றபோது எதிர்ப்பட்ட ஓர் யானையைத் துரத்த, அது, அக்காட்டினுள்ளே சிவலிங்கப்பெருமான் எழுந்தருளியிருந்த புதரை வலம் வந்து பேறு பெற்றமையால், அவ்விடத் திற்குக் கரிவலம் வந்த நல்லூர் என்பது பெயராயிற்று. அதுவே, உறையூர் உறந்தையென மருவினாற்போல, கருவையென மருவிற்று. அப்பதியின் கண், இறைவன் களாமரத்தினடியில் எழுந்தருளியிருத்தலால், திருக்களா வீசர் எனப்படுவர். மற்றும், படிகலிங்கமாதலின் பால்வண்ணநாதர் எனவும், திருமுகம் விளங்கித்தோன்றும் இலிங்கவடிவமாதலின் முகலிங்கர் எனவும் வழங்கப்பெறுவர். அங்கிருக்கும் அம்பிகை பெயர் ஒப்பனையம்மை.

வரதுங்கராமர், பாண்டியர் ஆட்சி நிலைகுலைந்த பின் சிற்றரசர் நிலையை யெய்தித் தென்காசி முதலிய விடங்களிலிருந்து அரசுபுரிந்த பிற்காலப் பாண்டியர்களில் ஒருவர். இவர், பதினாறும் நூற்றாண்டில் விளங்கினார் என்றும், பராக்கிரம பாண்டியன் புதல்வர் என்றும், பராக் கிரம பாண்டியன் தம்பியாகிய திருநெல்வேலிப் பெருமாள் என்பவருடைய மைந்தர் அதிவீர ராம பாண்டியர் என்றும் வரலாற்று ஆராய்ச்சியாளர் கூறுவர். வரதுங்கராமரும், அதிவீரராமரும் உடன்பிறந்தோர்களாகவே கருதப்பட்டு வந்திருக்கின்றனர். அதிவீரராமபாண்டியர் தமிழிலும், வட மொழியிலும் நிரம்பிய புலமை உடையவர், நைடதம், கூர்மபுராணம், இலிங்க புராணம், காசிகாண்டம், வெற்றிவேற்கை என்னும் அரிய நூல் களை இயற்றியவர்; தென்காசியிலிருந்து அரசுபுரிந்தவர்.

பண்டைநாள் தொட்டுத் தமிழ் நாட்டு மூவேந்தர்களும், தமிழ்ப் புலவர்கட்கு வேண்டும் பொருள்களைக் குறைவின்றி வழங்கித் தமிழைப் புரந்து வந்ததோடு தாமும் தமிழில் நல்ல புலமை அடைந்து விளங்கினர்.

* திருச்சி அகில இந்திய வானொலியிற் பேசியது.

சோழன் நலங்கிள்ளி, கோப்பெருஞ்சோழன், பாண்டியன் நெடுஞ் செழியன், உக்கிரப் பெருவழுதி, சேரமான் பாலையாடிய பெருங்கடுங்கோ முதலாய இவ்வரசர்கள் பாடிய பாட்டுக்கள் தொகை நூல்களிற் காணப் படுதல் கொண்டு, அவர்களுடைய புலமை முதலியவற்றை நன்கு உணர லாகும். மூவேந்தருள்ளும், பாண்டியர் தமிழ் வளர்க்கும் தனிச்சிறப் புரிமையுடையர். பாண்டியர் ஆட்சியின் இறுதிக் காலத்திலும், அம் மரபினர் தம் தாய் மொழியாகிய தமிழின் கண் மாருத பற்றுடையரா யிருந்தனர் என்பதனை இவ்விருவர் வரலாறுகளே மெய்ப்பிக்கும். இவ் விருவரும், உயர்ந்த தமிழ்ப்புலமையோடு போர்புரியும் ஆற்றலும் ஒப்பற்ற சிவபத்தியும் உடையவர் என்பது இவர்கள் இயற்றிய நூல்களாலும் வரலாற்ருலும் அறியப்படும்.

வரதுங்கராமரைப்பற்றிய கல்வெட்டுக்கள் கரிவலம் வந்த நல்லூரிற் காணப்படுதலால், அவர் அவ்வூரில் இருந்திருக்கலாமெனக் கருதுகின்றனர். இவரைப்பற்றி வழங்கும் கதைகள் பலவாகும். அவற்றுளொன்று :— அதிவீர ராம பாண்டியர், தாம் பாடிய நைடதத்தை இவருக்குக் காட்டும் படி ஒரு தூதன் மூலம் அனுப்ப, அதனைக் கண்ட இவர், இது அவகதை யாயிற்றே என மனந்தளர்ந்து,

'சங்கக் குழையனைத் தென்கரு வாபுரித் தாணுவைவான்
கங்கைச் சடையனைப் பாடல்செய் யாத கவிப்புலவீர்
அங்கச் சுமைகொண் டெழுநான்கு கோடி யருநரகப்
பங்கத்தில் வீழவன் ருேபொன்று வார்தமைப் பாடுவதே'

என்ற திருக்கருவைக் கலித்துறை யந்தாதிச் செய்யுளை யெழுதியனுப்ப, இதனைக் கண்டு சீற்றங்கொண்ட அதிவீரராமர் போருக்கெழுதலும், உடனே இவர்,

'செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே—மிஞ்ச
விரதந் தனைக்கொண்டு மெய்யன்பு பூண்ட
பரதனையும் ராமனையும் பார்'

என்ருெரு வெண்பாவைப் பாடி அவரது சீற்றத்தைத் தணித்தனர் என்பர். வரதுங்க ராம பாண்டியரின் மனைவியாரும் சிறந்த தமிழ்ப்புலமையுடைய ரெனல் தெரிகின்றது. அவ்வம்மை, அதிவீரராமர் இயற்றிய நைடதம், 'சென்றுதேய்ந்திறுதல்' என்னும் குற்றமுடையதாகக்கருதி, அதனை 'வேட்டைக்குச் சென்ற நாய் மீட்டு வந்தாற்போல்வது' எனக்கூறினர் என்ற வழக்கொன்றுண்டு.

தஞ்சாவூர்ச்சீமையை யாண்ட அச்சுதப்ப நாயக்கருக்கும், மதுரை நாயக்கர்களுக்கும் போர் மூண்டகாலை, வரதுங்க ராமர், மதுரையரசர்க்குத்

துணையாகச் சென்று போர் புரிந்தாரெனவும், அக்காலத்தில் அவர் மனைவியார் பிரிவாற்ருது சில பாட்டுக்கள் பாடினர் எனவுங் கூறுவர். அப்பாடல்களிலொன்று :—

என்னையவ ரமறந்தும் யானவரை மிகநினைந்திங் கிருந்து வாட
முன்னைவினைப் பயன்ருனே வப்பிறப்பிற் செய்ததவ முடிந்த வாருே
கன்னன்மத னபிராமன் வரதுங்க ராமனியற் காசி நாட்டில்
அன்னவயற் குருகினங்கா ளினியெவ்வா றுயிர்தரித்திங் காற்று மாறே

என்பது.

இனி, பதிற்றுப் பத்தந்தாதியென்பது, வகைக்குப் பத்துச் செய்யுளாகப் பத்துவகைச் செய்யுளால், ஒரு பாட்டின் அந்தம் அடுத்த பாட்டிற்கு ஆதியாக வரப்பாடுவது. இது, சொற்ருெடர் நிலைச் செய்யுளெனக் கூறப்படும். ஆசிரியர் தொல்காப்பியனுர் அந்தாதி முதலிய பிரபந்தங்கட்கு இலக்கணம் கூறிற்றிலரேனும், அவர்கூறிய 'விருந்து' 'என்னும் வனப்பின்கண், அந்தாதி முதலியவற்றை உரையாசிரியர்கள் அடக்கிக்கூறுதலாலும், சங்கநாள் தொட்டே ஒரு செய்யுளின் இறுதி அடுத்த செய்யுளின் முதலாகவரப்பாடும் வழக்கமுண்டென்பது, ஐங்குறுநூற்றின் நெய்தல் எட்டாம்பத்தும், பதிற்றுப்பத்தின் நான்காம்பத்தும் அவ்வாறு வருதலாற் பெறப்படுதலாலும், அந்தாதியாகப்பாடுவது தொன்றுதொட்ட வழக்கேயென்பது போதரும். கபிலர், பரணர், நக்கீரர், காரைக்காலம்மையார் முதலாயினுரியற்றிய அந்தாதிகள் பதினேராந்திருமுறையிலுள்ளன. நம்மாழ்வார். திருவாய்மொழி ஆயிரம் பாட்டுக்களையும் அந்தாதியாகப் பாடியுள்ளார். மாணிக்கவாசகர், திருவாசகத்தில் திருச்சதகம் நூறு பாட்டினையும், நீத்தல் விண்ணப்பம் ஐம்பது பாட்டினையும் மற்றும் பல பதிகங்களையும் அந்தாதியாகப் பாடியுள்ளார். பிற்காலத்திலே, யமகமும், திரிபுமாகப் புலவர்கள் பாடிய அந்தாதிகள் அளவற்றன. கடவுளுக்கு மாலைபோல் அலங்காரமாக வேண்டுமென்னுங் கருத்தினுல் இங்ஙனம் செய்யுட்களை மாலைபோற் கோத்தாராதல் வேண்டும். பாமாலையென்ற வழக்கும் காண்க.

திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதியிலுள்ள செய்யுட்களெல்லாம், செம்பாகமான இனிய சொல் நடையுடையவை, சந்த நலம் வாய்ந்தவை, திருவாசகம் முதலிய அருள் நூல்களின் சொல்லும் பொருளும் அமையப் பெற்றவை, சைவசித்தாந்தக் கருத்துக்களை ஆண்டாண்டுப் புலப்படுத்திச் செல்லுமியல்புடையவை. இவ்வாற்ருல், கற்பவருள்ளத்தில் கடவுள் அன்பினைவளர்த்து இன்பம் விளைக்கும் பேற்றியுடையவை, வரதுங்க ராமரே, தம்முடைய பாட்டின் சுவையை நன்கு உணர்ந்து, அவை, சிவபிரான் அருளாற் பாடப்பெற்றவை யென்னும் கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார். இரவு பகல், கன்னற் பாகிற் கோற்றேனில் கனியிற் கனிந்த

கவிபாட, அன்னத் தொகுதி வயற்கருவை ஆண்டான் என்னை யாண்டது வே ' என்பது காண்க.

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை யம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ ' என்னும்

திருவாசகச் செய்யுளின் சொல்லும் பொருளும்,

" வணங்கெ னத்தலை யளித்தனை நின்புகழ் வாழ்த்தென நாத்தந்தாய் ; இணங்கெ னத்திருக் கூட்டமுங் காட்டினை இனிப்பெறும் பேறுண்டோ ' என இதன்கண் அமைந்துள்ளன. மற்றும் ' ஐந்தெழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை ' எனவும், ' சிந்தனையுன் றனக்காக்கி நாயினேன் றன் கண்ணிணைநின் திருப்பாதப் போதுக்காக்கி, வந்தனையும் அம்மலர்க்கே யாக்கிவாக்குன் மணிவார்த்தைக் காக்கி 'எனவும், போந்த திருவாசகக் கருத்துக்கள் ' பெருமை சான்றநின் திருவெழுத் தைந்துமே பெரும்புணை யெனப்பற்றி, அருமை சான்றஇப் பவக்கடல் கடக்குமாறு ஆசையிற் றெழுகின்றேன் ' எனவும், ' சிந்தனை யுனக்குத் தந்தேன் திருவருள் எனக்குத் தந்தாய், வந்தனை யுனக்குத் தந்தேன் மலரடி யெனக்குத் தந்தாய்' எனவும் இந்நூலுள்ளே பயின்றுள்ளன. மற்றும் இங்ஙனம் வருவன பலவுள. இவ்வாற்றால் இந்நூலாசிரியராகிய பாண்டியர் பெருமான், திருவாசகத்தைப் பலகாலுமோதி, உள்ளம் உருகி, அவ்வுணர்ச்சியோடு இந்நூலைப் பாடினாரென்பது பெற்றாம். இங்ஙனம், திருவாசக் கருத்துக் கள் பலவமைந்திருத்தலோடு, ஓதுவாருள்ளத்தையுருகச் செய்யும் இயல் பும் உடையதாதல் கண்டே, சான்றோர்கள் இதனைக்,'குட்டித்திருவாசகம்' எனக்கூறிப் பாராட்டுகின்றனர்.

இந்நூலிற் பலவிடத்தும் சைவசித்தாந்த நுண் பொருள்கள் திகழ்ந்து விளங்குகின்றன. எடுத்துக் காட்டாக ஈண்டுச் சிலவற்றை நோக்கு வோம்.

' தோன்றியபோ துடன்தோன்றித் தோன்றாது மறைத்தென்னை
ஆன்றசெழுஞ் செம்பிலுறை களிம்புபோல் அகலாமல்
ஊன்றுமலத் துகளகற்றி உன்னருளும் பெறுவேனோ '

என்பதில், செம்பிற்களிம்புபோல் அனாதியே உயிரின் அறிவிச்சைசெயல் களை மறைத்து நிற்கின்ற அகவிருளாகிய ஆணவ மலத்தின் இயல்பு நன்கு கூறப்பட்டுள்ளது.

‘உணராத நின்னிலையை நீஉணர்த்த உணர்ந்ததற்பின்
புணராத தாடலையிற் புணர்ந்த தெனப் புளகோங்கத்
தணவாமல் எனையுனக்குத் தந்துருகி யிரண்டற்றேன்’

என்னும்

இதன்கண், இறைவன் நிலையை அவன் உணர்த்தவே ஆன்மா உணரும் என்பதும், ஆன்மா பாசநீக்கம் பெற்று இறைவனைத் தலைக்கூடியகாலை, ஒன்றுமாகாமல் இரண்டுமாகாமல் இரண்டற்ற நிலையை யெய்துமென் பதும் ஆகிய சமயக்கருத்துக்கள் அமைத்துள்ளன.

தாள், தலை என்ற இரண்டு சொற்கள் ‘தாடலை’ யெனப்புணர்ந்து ஒன்றுபட்டு நிற்பினும், அவை வெவ்வேறு பொருள் குறித்து நிற்றல் போல, இறைவனும் ஆன்மாவும் முத்தி நிலையில் கலப்புற்றவிடத்தும் இறைவன், ஆண்டவனும், ஆன்மா அடிமையுமாய் நிற்குமெனச் சைவ சித்தாந்தம் கூறுமென்க.

‘பாசம் நீக்கி மூவகைப் பசுக்களை, மாசில் முத்தியாம் வனத்தில் மேய்த் திடும், ஈசன் மின்னைநேர் இடைச்சி காதலன், ஆசில் பால்வணத் தண்டர் நாதனே இச்செய்யுளில் இறைவனையும் உயிர்களையும், சிலேடையாக உருவகப்படுத்தி, சித்தாந்தப்பொருளை விளக்கியிருப்பது கற்றூர்க்குக் கழிபேரின்பம் பயப்பதாகும். ‘அண்டர்’ என்ற சொல்லுக்குத் தேவர் என்றும், இடையர் என்றும் இரண்டு பொருள் உண்டு. அண்டர் நாதன் என்பது, தேவர்களுக்கு நாயகனுகிய சிவபெருமானைக் குறிக்கும், அது, இடையர் தலைவன் என்றும் பொருள்படுதலால், உமாதேவியை ‘மின்னை நேர் இடைச்சி’ யென்றுகூறி. அவள் காதலன் என்றூர். இடைச்சி இடையையுடையவள் என்றபடி.

அண்டர்நாதன் பசுக்களை மேய்ப்பது இயல்பு, பசுக்களை மேய்க்கும் இடையன் பாசத்தின் கட்டினை நீக்கி அவற்றைப் பந்தமற்ற வனத்திலே மேயவிடுவன், உயிருக்குப் ‘பசு’ என்றது ஒரு பெயர். உயிர்கள், விஞ் ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படும். பாசம், ஆணவ கன்ம மாயையாகிய கட்டுக்கள், உயிர்கள் முத்தியடைய வேண்டுமாயின், இம்மூவகையான பாச பந்தத்தினின்றும் நீங்குதல் வேண்டும். பாசத்தை நீக்குவதும், முத்தியிற் சேர்ப்பதும் இறைவன் திருவருளே. இக்கருத்து இச்செய்யுளின் முன்னிரண்டியில் இனிது விளங்குதல் காண்க.

இனி இவ்வாசிரியர், தம்மை இறைவனே வலிந்து ஆட்கொண்டதை யும், காட்சி கொடுத்தருளியதையும், மற்றும் தாம் பெற்ற பேறுகளையும் பலவிடத்தும் கூறுதலால், இவர் இறைவன் பேரருளைப் பெற்ற சிரடியார் என்பது தேற்றம். இவருடைய செய்யுட்களே அதற்குச் சான்றுக வுள்ளன. அவற்றுட் சில பின்வருவன :—

'கண்ட கண்கள் புனல்பாயக் களிப்பாய் உள்ளம் கரையழிய
விண்ட மொழியின் நாக்குழற விம்மிமேனி மயிர்பொடிப்பப்
பண்டை வசம்போய்ப் பரவசமாய்ப் பரமானந்தத் தெளிநறவம்
உண்டு தெவிட்டா அருள்புரிந்தான் கருவை வாழும் உரவோனே.'

'உரகா பரணத் திருமார்பும் உமையொப் பணையாள் இடப்புறமும்
சிரமா லிகையும் புரிசடையும் செய்ய வாயும் கறைமிடறும்
வரதா பயமும் மழுமானும் வயங்கு கரமும் மலரடியும்
கருவா புரியான் வெளிப்படுத்திக் காட்சி கொடுத்து நின்றானே.'

## பாத்தூண்

திரு. K. சோமசுந்தரம்பிள்ளையவர்கள், B. A., B. L. தஞ்சை.

பாத்தூண் என்பது பகுத்துண்ணுதல் எனப்பொருள்படும். 'நடு வணைந்திணை......படுதிரைவையம் பாத்திய பண்பே' என்றவிடத்தில், பாத்துதலென்பது பகுத்தல் என்ற பொருள்பட வழங்கியது காண்க. (தொல். பொ. 2). எனவே பிறர்க்குப் பகுத்து இட்டு உண்பது என்பது இதன் திரண்ட பொருளாம்.

தமிழக முழுவதும் அமைதி நிலவ, தமிழ் அரசியற் (Politics) கலை நூலார், மக்கள் விலங்கினங்கள்போன்று வருத்தலும், கோறலும் ஒறுத்தலும், பறித்தலுமின்றி வாழப் 'பாத்தூண்' என்பதை விதித்துள்ளார். இதனால், அன்னார், பலர்க்கும் பயன்பட வாழும் பண்பினையும் உய்யும் வழியினையும் பண்பறத்தின் கொள்கையென நிலைநாட்டினர். கோறல் போன்ற அழி வினைகளால், அமைதியான பொதுவுடைமை (Communism) பெறப்படுதலில்லை யாதலான், தமிழ் அறநூலாரும், இன்னுயிர் அனைவர்க்கும் இனிதாதலான், ஒருவர் தமது பொருளைப்பசித்தவர்களுக்குப் பகுத்துக் கொடுத்து உண்ணல் சிறந்த அருளொழுக்கமென வகுத்தார். இதன் முடிபொருளைப் புலன்கொளுமாற்றாற் குறிப்பிக்கவேண்டி, வள்ளுவர், தென் புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற ஐம்புலத்து ஆறு, இல்லறத் தானுக்கு இன்றியமையாதெனச்சுட்டி அறிவுறுத்துவாராயினர்.

இல்லின்கண்ணிருந்து மனை, மக்கள், பொருள் முதலியவைகளைப் போற்றி வாழும் வாழ்க்கையாவும், புதியராய் வந்தாரைப் பேணற் பொருட்டென்பதையும், சுற்றத்தாரும் புதியராய் வந்தாரும் வேறுவார்

என்பதையும் அறிவிக்கவேண்டியே 'தென்புலத்தார் தெய்வம் விருந் தொக்க ருனென்ருங், கைம் புலத்தா ேறம்பறலே' என்ற குறளாற் பொய்யில் புலவர் விளக்கி யருள்வாராயினர். ஐந்திடத்தும் இயற்றத் தகும் அறநெறியினைச் செய்தல் தலையாய அறமென ஈண்டு வற்புறுத்தப்பட்டது அறியற் பாற்று. மற்றும் விருந்தினரை மூன்றும் நிலையில் வைத்தமை யான் முதலிருவரையும் ஒழித்து ஏனையரை நோக்க அவரை ஓம்பல் தலை யாய அறமெனவும், தன்னைக் கடையில் வைத்தமையான், தன்னை மாட்டும் ஓம்பல் கடையாய அற மெனவும் உணர்த்தினமை வெள்ளிடை மலைபோல் விளங்கும். எல்லா அறங்களும் தானுளனுய் நின்று செய்ய வேண்டு மாதலின் தன்னைப்பற்றி ஓம்புதலும் அறனுயிற்றென்க. (Charity begins at home). இவ்வாறு பகுக்கப்பட்ட ஐங்கடமைகளும், இல்லறம் பேணி வாழ்வான் நடத்தவேண்டுவது பற்றியே அறிவுடை அரசர்க்குரிய இறைப் பொருள் ஆறிலொன்ருயிற்று. எனவே இயல்பினுன் ஆற்றுமில்வாழ்க்கை வாழ்பவன் ஆறு கடமைகளுக்கும் தமக்குரிய குடிக்கும் வருவாய்க்கும் தக, வருவாயினைப்பகுத்து வைத்தபின்னரே தான் உண்ணவேண்டுமென்பது பெற்றும். இந்நெறியில் பின்னருண்ணுஞ் சிறப்பானது, இல்லின்கண் விருந்திருக்கவுண்ணுத வேளாண்டகைமையை விளக்கும் பான்மையது. இஃதே பாத்தூண் என்பதாகும்.

இனி, தென் புலத்தார் முதலாய ஐம்புலத்துள், முன்னைய இரண்டும் கட்புலனுகாதரை நினைந்து செய்வன வாகலானும், பின்னைய இரண்டும் பிறர்க் கிதலன்மையானும் இடை நின்ற விருந்தோம்பல் சிறப்புடைத் தாயது. விருந்தென்பது புதுமை எனவே பொருள் படும். 'விருந்து புனலயர' (பரி-6-40); 'விருந்தா யடைகுறுவார் விண்' (பு. வெ. 3-12); 'மன்று மருண்டு நோக்கி விருந்திற் புன்கணேவுடையர்' (புறம் 46) என்ற விடத்தும் விருந்து புதுமையைக் குறிப்பது உணரற்பாலது. எனவே விருப்பருச் சுற்றத்தாரை விருந்தினரெனக் கொள்ளல் எவ்வாற்ருனும் பொருந்துதலில்லை. ஆகவே விருந்தினராவர் நம்மை அறிந்தும் அறியா மலும் நாடிவரும் துறவிகள், ஏதிலர், வறியர் முதலாயினர் பலரும் ஆவர்.

'அட்டுண்டு வாழ்வார்க் கதிதிக ளெஞ்ஞான்றும்
அட்டுண்ணு மாட்சி யுடையவர்—அட்டுண்டு
வாழ்வார்க்கு வாழ்வார் அதிதிக ளென்றுரைத்தல்
விழ்வார்க்கு விழ்வார் துணை' என்ற

அருமைத் திருவாக்கு ஈண்டுணரற்பாலது.

அறம் பொருள் இன்பத்தின் கண் பெருமிதம் தரும் நற்குணங்கள் பலவும் உடைமை நாகரிகமாதலான், நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்க்கு இன்றியமையாது வேண்டப்படுவது தாளாண்மையும் வேளாண்மையுமே.

இது பற்றியே, 'தாளாண்மையென்னுந் தகைமைக்கட்டங்கிற்றே, வே
ளாண்மை யென்னுஞ் செருக்கு' என்றார் வள்ளுவப் பெரியார். மன்னு
வுலகத்து மன்னுயிர் பலவும் மாரியினாற் பயன்பெறுகின்றது. அதே
போன்று இல்வாழ்வான் தன் முயற்சியினானே தீவினை விட்டீட்டிய
பொருளைக் கொண்டு தன் மனைவி மக்கட்கும் கேளிர்க்கும் உற்றதுன்பத்
தினைத்துடைத்து, அன்னாரைத் தளராமல் தாங்குவதுடன் ஏதிலருக்கும்,
வாழ்க்கைக்கின்றியமையா நலம் படைப்பார்க்கும் பிழைப்பும் உழைப்பும்
தந்து சார்வாய் நிற்கின்றான். தென்புலத்தார்க்குச் செய்யும் சிறப்பொடு
பூசனை வாயிலாகத் தக்கார் பலருக்கும் தன்னாலான ஈகை புரிகின்றான்.
தன்னையண்டிய சுற்றத்தாரைத் தன்னின் வேறாகக் கொள்ளாது பழைமை
பாராட்டித் துணையாய் அணைகின்றான். என்றும் முகமன் இயம்பாத துவ்
வாதவர் கண்ணும் சென்று தங்கள் முயற்சியாலாய பொருளைக்கொடுத்துக்
காப்பர் நல்லோர். அவர், அறிவான் உழுதுண்ணுங் கற்றோரது வறுமை
யஞ்சி அன்னார்க்கு அருந்துணையாய் நிற்பார். துறந்தார்க்குப் பசி முதலிய
வாற்றான் இடையூறு நேரிடாது உண்டி உறையுள் முதலியன வழங்கிப்
பணியாற்றுவர். எனவே இத்தகையவர், தந்நெறியில் வழுவாது நிற்பதோ
டமையாது, தவஞ்செய்வாரையும் அவர் நெறியில் செலுத்தும் நீர்மையவர்
என்பது பெறப்படும். மற்றும் திக்கின்றி இறந்தார்க்கும் செய்யத்தகும்
பணிகளையும் இயற்றுவதில் ஈடுபடுவர். இவ்வாறு தமது ஆக்கமும்
ஆற்றலும் தமக்கேயன்றிப் பலருக்கும் பயன்படும்படிச் செய்வர். எனவே,
இல்லறத்தானது அறத்தாறாவது பழி அஞ்சிப் பகுத்துண்டலும், எல்லார்
மாட்டும் அன்பு செய்து தனது உடைமை பலருக்கும் பயனாகும் வண்ணம்
ஒழுகுதலுமேயாம். இத்தகைய ஒழுகலாறு அமைதியுடைய பொதுவாழ்
வினை வளர்க்கும் தகைமைத்து. இதுவே, பாத்தூணின் குறிக்கோள் என்க.

பாத்தூண் பழகினாற்குப் பசிப்பிணி பற்றுதலில்லை. அங்ஙனம்
பசிப்பிணி தன்னை அணுகாமல் தடுப்பதற் கேற்ற மருந்து, தான் பிறி
தொருவருக்குப் பகுத்துண்ணுதலே எனுங் குறிப்புத் தோன்றச் செந்நாப்
போதார், 'பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந், தீப்பிணி தீண்ட
லரிது' என்ற செந்தமிழ் மாமறையில் விளக்கிப் போந்தார். தன்பசியே
தீர்த்து உயிர்வாழ்வானுக்குச் சாதலினின்னாததில்லையாதலின் அதனினு
மிழிவு, பாத்தூண் பழகாதே ஒத்ததறியாதே தானேயுண்டற் பொருட்டுப்
பொருளைச் சேமித்து வைத்திழத்தல் எனப்பிருண்டும் தேவர் அறிவுறுத்தி
யது ஈண்டு உணரற்பாற்று. பாத்தூண் வழங்காமையான், பொதுவாக
நல்லொழுக்கம் குன்றத் தீயொழுக்கம் தலைதூக்கி நிற்கும். தவிரப்
படுவனவாகிய களவும், பொய்யும், சூதும், பொறாமையும் இயல்பாக
நின்று நிலவும். மற்றும் பசிப்பிணி பற்றவிட்டால், பல்வகைப் பூசலெழு
மென்பதில் எட்டுணையும் ஐயமின்று. பாத்தூணைப் பற்றியொழுகார்
அருளுடையாரெய்தும் ஈத்து உவக்கும் இன்பத்தினையும் கண்டறியார்.
எனவே, பிறர்க்குப்பயன் பெற வழங்காத இத்தகைய மாந்தர் வாழ்க்கை

நிலக்குப் பொறை யாதல் காண்க. பாத்தூண் வழங்கியிளைத்தாரில்லை யென்க. ஆகவே பிறர்க்குதவுங் கடப்பாடறிந்து, பாத்தூணைப் பற்றி ஒழுகினல்லது உலகநடை ஊறுபடுமென்பது, வள்ளுவனார் தெள்ளமிழ்தத்தை ஆரத்துய்ப்பவர் உணரப் பெறுவார்.

'இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி, வேளாண்மை செய்தற் பொருட்டு' எனத் தமிழ் மறை அறைதலான், பாத்தூண் பழகும் நயனுடையார் இல்வாழ்க்கைநிலை மேற்கொள்வார். இல்லிருந்து பாத்தூண் ஓம்பா வழி இல்லின்கண் ணிருத்தலும் பொருள் செய்தலும் பயனற்றவையாம். அவர்தம் வாழ்வு இன்பமுறாது தாழ்வுறும். வேளாண்மை செய்தற் பொருட்டுப் பொருளீட்டல் வேண்டுமாதலானும், அப்பொருளீட்டத்திற்கு நன்முயற்சி இன்றியமையாததாதலானும், அம்முயற்சியினைப் பழிப்பிற் கேதுவாகிய பாவ வழியிற் செலுத்துதல் தகாது. என்னெனின், பிறன் ஒள்ளியபொருளைப் பாவவழியான் வௌவி, அப்பொருளான் ஒருவன் பாத்தூண் வழங்க மேற்கொள்ளின், புண்ணியம் பொருளுக்குரியானாகிய அப்பிறன் பாலும், பாவம் தன் பாலும் பொருந்திச் சார்ந்து நிற்கும். இதனானே, பிறன் பொருள் கைப்பற்றிப் பாத்தூண் பழக விழைவானது இல்வாழ்க்கை நிலை, ஒழுங்குபடாது இடையறுந் தொழியும். மற்றும் அவனது வாழ்க்கை இடுகாட்டிலுள்ள ஏற்றுப் பனையினை யொக்கும். ஒரோவழி அவனது வாழ்க்கை அவனுள்ள வரை குறைவு படாதிருந்தாலும், அவ்வாழ்க்கையினாலாய உயர்நிலை அவனுக்கும், அவன் வழியினர்க்கும் இல்லையாகும். இது குறித்தன்றோ, பெருநாவலர், இல்லறத்தான் வையத்தே வாழ்வாங்குவாழவும் பொருள் தேடுங்கால் பழியஞ்சித் தேடவும், தேடியதைப் பகுத்துண்ணவும் அருளினர். 'பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை, வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்' என்ற குறட்பா இவற்றைத் தெளிவுறுத்தும்.

பழிபாவத்திற்கு அஞ்சி ஈட்டும் பொருள், பல்வகையானும் உரிமையுடன் உயிர் வாழத் தக்க தொழில் மூலம் வருமாதலான், அத்தொழில் உழவேயென்பது உண்மையுணர்வுடையாரனைவர்க்கும் உடன்பாடாகும். வருந்தி உழுது பயிரை வளர்ப்பாரே பாத்தூண் துறையினை மேற்கொண்டு உயிரை வளர்ப்பவர் என்பது 'இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது, கைசெய்தூண் மாலை யவர்' என்ற பொய்யா மொழியானும், 'வேளாளனென்பான் விருந்திருக்க வுண்ணாதான்', 'இரப்போர் சுற்றமும், புரப்போர் கொற்றமும், உழவிடை விளைப்போர்' என்ற பிற சான்றோர் கூற்றானும் புலப்படுதல் காண்க.

விருந்து புறந்தரூஉம் உழவுத் தொழிலே மேற்கொண்டொழுகுபவர், ஆதமிலார்க்கு ஆதரங்கள் பெருக, இனிய முகம் பொருந்தி ஆணமில் சிந்தையராயிருத்தல் வேண்டும். ஏனெனில் இப்பெற்றியுடையாரே,

பாத்தூணின் இலக்கணத்திற் கொப்ப, இந்திரரமிழ்தம் கிடைத்த ஞான்றும் அதன் இனிமையையும் அருமையும் கருதித்தனித்து உண்பாரலராவர். இவ்வாறு பாத்தூண் விரும்பாது, விருந்து புறத்ததாத் தானுண்ணலை அன்னவர் இசைவாராயின், அது தமக்கு நோயாகும். அவர், செல்வராயினும் அவர் தம் வாழ்க்கை நாளடைவிற் பாழ்பட்டொழிய வறுமையாலுழப்பர். இதனனே பாத்தூணில் தலைப்பட்டார் இரக்கங்குடி கொண்ட மனதுடன் முகமலர்ந்து இன்முகங்காட்டி வந்த விருந்ினரை உபசரித்தல் வேண்டும். அங்ஙனம் இன்முகங் காட்டாராயின், மோப்ப வாடும் அனிச்சம் போன்று, வந்தவிருந்தினர் அவ்வயின் வாடி, நீங்குவர். எனவே, பாத்தூண் விரும்புவார்க்கு அன்பினும் ஆர்வமுடைமை, அரும்பு, மலர், காய், கனிகள் போன்ற கண்ணேக்கு, நகைமுகம், இன்சொலுடன் கலந்தவாய்மை, குறிப்பறிந்திதல் முதலியன மிளிரல் வேண்டும்.

கண்ணேக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே திங்காயா—வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு.

இன்சொல் விளைநிலனு ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதி ரீன்பதோர்
பைங்கூழ் சிறுகாலைசெய்

என்றபாக்கள் பாத்தூண் வழங்குவான் வண்மையினை விளக்கும்.

பாத்தூண், கொழுநனும் மனைவியும் அன்பொடு இசைந்து கூடி அறஞ் செயினல்லது நடை பெருதது. கோவலன் பிரிவால் தன்னந் தனியே யிருந்து தவித்துத் துன்ப முற்ற கண்ணகி, பாத்தூண் வழங்கத் தன் கணவனேடு வாழ்வு பெருததற்கு மனம் வருந்தி,

'அறவோர்க் களித்தலு மந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னை'

எனக் கூறியதனுல், பாத்தூண் செய்யாததனுலுண்டான கண்ணகியின் துயருறு நிலை. சிலப்பதிகார அடிகளான் நன்குணரப் படுதல் காண்க. பாத்தூண் வழங்கற்கு இல்லாளுடைய மாட்சி இன்றியமையாது வேண்டப் படும். ஆறிய கற்பிற் றேரிய இல்லவள் இசைந்தாற்ருன் வறுமைக் காலத்தும் பாத்தூண் வழங்கப் பெறும். அவ்வாறு இசையாவிடின் கொழுநன் குறைவற்ற செல்வமும், ஆன்ற குடிப்பிறப்பும், கொடையா விட்டிய புகழுமுடையனுயினும் பாத்தூண் இனிது நிறைவேருது. எனவே

பொருள் முதலிய பலவற்றினும் சிறந்த மனைத்தக்க மாண்புடையாளைப் பெற்றவனது இல்லறவாழ்க்கையின் அடிப்படை பாத்தூணே யாகு மென்பது இங்கு அறியத்தக்கது. இதனை

'வசையில் வான்திணைப் புரையோர் கடும்பொடு
விருந்துண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோடு உண்டலும் புரைவது என்றாங்கு
அறம்புணை யாகத் தேற்றி........என்ற

குறிஞ்சிப் பாட்டு வரிகளான் இனிது உணர்க.

மேலும், பாத்தூண் விரும்புவார்க்கு இம்மையில் வறுமைப்பிணியால் நேரும் பருவரல் அணுகாது; அவர்கள் தீவினை விட்டீட்டிய பொருள் நல்வழிப் படுதல் கண்டு திருமகளும் நிலமகளும் மகிழ்ந்து துணை செயக் கருதி உறைவார்கள் என்பவற்றை

i. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று

ii. அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்

iii. வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்

என்ற குறட்பாக்களான் உணரலாம். இம்மைப் பயனின்றி மறுமைப் பயனாகிய வானுலக இன்பமும் பாத்தூண் உடையானைக் கிட்டுமென்பது 'செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான், நல்விருந்து வானத் தவர்க்கு' என்ற திருக்குறள் வலியுறுத்தல் காண்க. இஃதன்றியும் பாத்தூண் வழங்குபவர் வேள்விப் பயனையும் அடைவாரென்பது 'இணைத் துணைத் தென்பதொன் றில்லை விருந்தின், றுணைத்துணை வேள்விப் பயன்' என்ற குறளால் தெள்ளிதின் உணரலாகும்.

மற்றும், தாவா நல்லிசைத் தண்டமிழ்ப் புலவர்கள் காமுறும் காமத்துப்பாலின்கண், நாயனார், அரிவை முயக்கம், இல்லிருந்து இல்லற வாழ்க்கை முறையே நடத்தித் தனது தாளாண்மையால் ஈட்டிய பொருளைப் பலருக்கும் பயன்படப் பகுத்துண்ணும் இன்பம் போலுள்ளது என்ற கருத்துப்படத்' தம்மிலிருந்து தமதுபாத்துண்டற்றா,லம்மா வரிவை முயக்கு' என்ற குறள் வெண்பாவில், தெளிவுறக் கூறியுள்ளமை ஈண்டு அறிதற் பாலது. காதன்மை மிக்க மகிழ்ச்சி மேலிட்ட தலைவன் கூற்றாக எழுந்த பன்னயங் கெழுமிய இக் குறட்பா, வாழ்க்கை நலத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது புலனாகும். இந்த இன்பக்குறளில் பருமையுறச் (தூலமாக) சிற்றின்பப்பொருள் அமைந்துளதேனும், நுண்மையுறப் பேரின்பப்

பொருளும் அமைந்திருத்தலான், இது இறைநிலை பெறும் அறவழியை விளக்கும் பான்மையது. மற்றும் இக்குறட்பாவில் அன்பினையும் அறத்தினையும் பற்றிக் குறிப்பானுணர்த்தியதை நுணுகி ஆயின், புதிய கருத்துக்களின் நுகர்ச்சி, முடிவு செல்லாதபடி பெருகிய வேட்கையும் இன்பமும் விளைத்தல் ஒருதலை. இக்குறட்பாவொடு, 'அன்பு மறனுமுடைத்தாயி னில்வாழ்க்கை, பண்பும் பயனு மது' என்ற குறளையும் இணைத்து ஆயுங்காலை, இவற்றின் பொருள் நிலை மிக ஆழ்ந்து செல்லும். அப்பொருள் நிலையின் தன்மையினை உணருந்தோறும் புதியதொரு கிளர்ச்சி நம்பால் எழுந்து பெரு வாழ்வு நிலை அளிக்கும். இவ்விரு பாக்களின்கண், ஆனந்த வெள்ளத்தழுந்தும் ஈருருக் கொண்ட ஓராருயிர், தான் உடம்போடும் யாவரிடத்தும் நின்று செய்யத்தகும் அன்பினையும், பாத்தூண் அறத்தினையும், தனக்கவற்றை உடம்பு முதலாற்ருன் எய்துவித்து அன்பினுன் இன்புறுத்திய உயிர்க்கணவனும் இறைவனைத் தன்னிலும் கண்டு தன்னையும் தன்னகத்தேயுளதாகிய அன்பினையும் அறத்தினையும் அவனுடைமையாகக் கண்டு, அவன் வேறின்றி அவனிடத்தே அடக்கமுற்று, இடைவெளி எய்தப்பெருதவாறு முயங்கி இரண்டறக் கலத்தலையுங் கவினுறக் குறிப்பிடப்பட்டிருப்பதுங் காண்க. எனவே, பாத்தூண் என்பது வரனென்னும் வைப்புக் கோர் வித்தாகும். இவ்வித்தினது நறும் பூ அறமென்பதும், இனிய காய் அன்பென்பதும், இன்பக்கனி உள்ளத்தைக் குளிர்விக்கும் அருளென்பதும் தெளிந்தாம்.

இத்துணையுங் கூறிய வாற்ருல், பாத்தூண் என்பது உடைமைப் பொருள்களைப் பலருக்கும் பயனுகும் வண்ணம் பகுத்து நுகர்வதினுனெழுந்த பொதுவாழ்வினையும் அமைதியையும் நிலைநாட்டும் தமிழர் தம் பண்டை அறத்தின் கொள்கை யென்பதூஉம், இல்லறத்திற்குத் தக்க மாட்சிமையுடைய மனையாள் இல்வழியும், வந்த விருந்தினர்பால் அன்புடைமையும் இன்முகமும் அருள் நோக்கும் இல்வழியும், பாத்தூண் இனிதே நடை பெருதென்பதூஉம், இதனுன் மறைபுலங் கொள வியம்பும் இம்மை, மறுமை வேள்விப் பயன்களும், பேரின்பமும் பெறுவதுறுதி யென்பதூஉம் உணர்வாம்.

# செஞ்சிக் கோட்டை

(வித்துவான். திரு. மா. இராசமாணிக்கம் அவர்கள், B. O. L.
தமிழாசிரியர், சென்னை.

## அமைப்பு

செஞ்சிக்கோட்டை என்பது பல மலைகளைத் தன் அகத்தே கொண்டது. இவையாவும் மதிற்சுவர்களால் இணைப்புண்டிருக்கின்றன. அச்சுவர்கள் பலவிடங்களில் இயற்கையாகவும் சிலவிடங்களிற் செயற்கையாகவும் அமைந்துள்ளன. அங்குக் கட்டிடங்களையுடைய மலைகள் மூன்று. அவை சங்கிலிமலை, அரசர்மலை (இராஜகிரி), 'கிருஷ்ணகிரி' என்பன. இவற்றை ஒருபால் சுற்றி ஆழ்ந்த அகழி ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. அகழி மதில் மீதும் அங்கங்கே காவற்கிடங்குகள் இருக்கின்றன. செஞ்சிக்கு இரண்டு கற்கள் தொலைவில் உள்ள **சிங்கபுரம்** என்னும் ஊர்வரை பழைய செஞ்சி பரவி இருந்ததாம், அந்த இடத்திற்றான் சயசிங்கு பூசித்த **அரங்கநாதர் கோவில்** அழகுற அமைந்திருக்கின்றது. இராசகிரி, கிருஷ்ணகிரி என்னும் மலைகளைச் சூழவுள்ள இடம் இப்பொழுது காடாகவும் வயலாகவும் இருக்கின்றது. அந்த இடத்தில் இப்பொழுதும் கற்கம்பங்கள், மண்டபங்கள், பாழடைந்த சிறுகோவில்கள் முதலியவை இருத்தலை நோக்க, அவ்விடம் சயசிங்கு மன்னன் காலத்தில் குடிகள் வாழ்ந்த இடமாக இருந்திருத்தல் வேண்டும் என்பது எளிதிற் புலனாகிறது.

## கிருஷ்ணகிரி

இஃது ஏறக்குறைய இராசகிரியிற் பாதி அளவு உயரமுடையது. இதற்குள்ள படிகள் செங்குத்தானவை; ஏறுதற்குக் குறுகலாகவுள்ளவை; அங்கங்கே இளைப்பாறத் தங்குதற்கு மண்டபங்கள் அமையப்பெறாத இம் மலையில் காவற் கூடங்கள் மட்டும் அங்கங்கே காட்சி அளிக்கின்றன. மலைமீது **பாழ் மண்டபம்** ஒன்று இருக்கிறது. அதன்மீது 'டச்சுக்காரர்' கட்டியதாகக் கூறப்படும் மேல் மண்டபம் ஒன்றும் காணப்படுகிறது. **கல்யாணமண்டபம்** ஒன்று உள்ளது. சிறுகோவில் ஒன்றும் **அரங்கநாதர் கோவில்** ஒன்றும் இருக்கின்றன. ஒன்றிலேனும் படிமங்கள் இல்லை. கோவில் மண்டபத்தூண்களில் உள்ள வேலைப்பாடு ஓரளவு அழகுடையது. நெற்களஞ்சியங்கள் இரண்டு இருக்கின்றன. எண்ணெய்க் களஞ்சியம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நெற்களஞ்சியங்கள் 'கூண்டு வண்டி'யைப் போன்ற அமைப்புடையவை. அவற்றில் நெல் கொட்டுவதற்கு என்று மேற்கூரையில் திறப்பு விடப்பட்டுள்ளது. அத்திறப்பிற்குச் செல்லப் படிக்கட்டுகள் அமைந்துள்ளன. மலைக்குக் கீழும் மேலுமாக இரண்டு பீரங்கிகள் வைக்கப்பட்டுள்ளன. மலையின்

ஒவ்வொரு பகுதியிலும் மதிற் சுவர்கள் இருக்கின்றன. ஆங்காங்குச் சில சுனைகள் இயற்கையாகவும் செயற்கையாகவும் அமைந்துள்ளன. செயற்கைச் சுனைகள் இரண்டு பக்கங்கள் செங்கற் சுவர்களையும் ஒரு பக்கம் மலையையும் ஒரு பால் பள்ளமான சுனைப் பகுதியையும் உடையவையாக இருக்கின்றன. அகல் விளக்குப் போன்ற பாறை ஒன்றும் காணப் படுகிறது.

## இராசகிரி

இராசகிரி இரண்டு மலைகளை ஒன்றன்மேல் ஒன்றாக உடையது. படிக்கட்டுகள் சாய்வாகச் செல்பவை. இடையிடையே தங்கி இளைப்பாறத் தக்க மண்டபங்கள் **ஒன்பது** இருக்கின்றன. மண்டபத் தூண்களில் சித்திரச் செதுக்குவேலை ஓரளவு திறம்படச் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டபத்தின் இருபுறங்களிலும் **காவற்கூடங்கள்** இரண்டு இருக்கின்றன. பாறைகள்மீது இரண்டோர் இடங்களில் **அநுமார்** உருவம் செதுக்கப்பெற்றுளது. நான்கு, ஐந்தாம் மண்டபங்கட்கு இடைப்பட்ட இடத்தில் எண்பதடி நீளமும் அறுபதடி அகலமும் உள்ள பாழ் மண்டபம் ஒன்று நடுவே முற்றத்தை உடையதாய் இருக்கின்றது. அதன் தூண்கள் சில சித்திரவேலைப்பாடு கொண்டுள்ளன. அம்மண்டபத்திற்கு எதிரில் **கமலக்கன்னி கோவில்** ஒன்று சிறிய வடிவில் இருக்கிறது. அதன் பின்புறப் பாறையில் திருமால் உருவம் தீட்டப் பெற்றுளது. கோவில் முன் **பலி பீடம்** இருக்கிறது. அது நீண்ட சதுரக்கல். அதன்மீது நாற்புறமும் நான்கு பெண்கள் தலைகளும், நடுவில் இரண்டு பாதங்களும், ஒரு புறம் எருமைத்தலையும், அதன் எதிர்ப் புறம் செம்மறி ஆட்டுத்தலையும் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றால், அங்குத் தலைப்பிள்ளைக்காரியும், செம்மறி யாடும், எருமைக்கிடாவும் பலியிடப்படல் மரபு என்பது காணலாம்; இதனையே அங்குப் புல் அறுத்துக்கொண்டிருந்தவரும் கூறினர். அங்கு ஆண்டுதோறும் சித்திரைத்திங்களில் பத்துநாள் விழா நடைபெறுதல் இன்றும் வழக்கமாம். கமலக்கன்னி கோவிலுக்கு வலப்புறம் **சிவலிங்கம்** (இதனை அங்குள்ளார் **ஆவுடையார்** என்கின்றனர்) ஒன்று இருக்கிறது. கோவிலுக்கும் பலிபீடத்திற்கும் இடையே அம்மச்சாரு, இருசாறு, பிள்ளையார் சிலைகள் இருக்கின்றன. முன்னிரண்டு பெயர்களின் பொருள் புலனாகவில்லை.

கோவிலுக்கு அப்பால் **பாலரங்கநாதர் கோவில்** ஒன்று பாழடைந்து கிடக்கிறது. அதன் மூலத்தானத்தில் ஒன்றும் இல்லை; முன்மண்டபம் சிறியது. அதனை அடுத்துப் பெரிய மண்டபம் உண்டு. அதன் தூண்களில் சங்கு, சக்கரங்கள் அநுமார் உருவம் முதலியன செதுக்கப்பட்டுள்ளன. விமானம் செங்கற்களால் ஆயது. மகாபலிபுரத்து இரத உச்சியைப் போன்றது. விமானத்தின்மீது திருமால் அவதார உருவங்கள்

அடியார் உருவங்கள் காணப்படுகின்றன. திருச்சுற்றுச்சுவர் இடிந்து விட்டது. தளம் மட்டுமே காணக்கிடக்கிறது. சுற்றிலும் துளசிச் செடிகள் காட்சி அளிக்கின்றன.

ஏழு-எட்டாம் மண்டபங்கட்கு இடையே மலையின் இருபகுதிகளையும் ஒன்றுபடுத்தும் **சிறிய பாலம்** ஒன்று இருக்கிறது. அதன் நீளம் 20 அடி; அகலம் 5 அடி.

இரண்டாம் மலைமீது (1) 80 அடி நீளமும் 35 அடி அகலமும்உள்ள **ஏகாலுமண்டபம்** ஒன்று ஐந்து தூண்களை இடையே பெற்றதாய் இருக்கின்றது. அதன் அருகில் (2) இடிந்த **கல்மண்டபம்** ஒன்று 'ப' முறையில் அமைந்துள்ளது. (3) **அரங்கநாதர் கோவில்** ஒன்றும் இருக்கிறது. அதன் மூலத்தானம், முன்மண்டபம், மறுமண்டபம், பிராகாரம் என்பன பழுதுறுமல் இருக்கின்றன. (4) மூன்று அடுக்குகளை உடைய **மணிக் கூண்டு** ஒன்று இருக்கிறது. மேலே மணி அமைக்கத்தக்க வட்டச்சுவர் இருக்கிறது. (5) இடிந்த கூரையுடைய **களஞ்சியம்** ஒன்று உண்டு; (6) **பண்டார மண்டபம்** ஒன்றும் இருக்கிறது. அதன் மேற்றளத்தில் பணம் போடப் பெரிய புழை ஒன்று இருந்தது; அது இப்பொழுது சிறுகிடப் பெற்றுள்ளது. (7) அதன் அருகில் 30 கால்களைக் கொண்ட **கல்மண்டபம்** ஒன்று காட்சி அளிக்கிறது.

### மலை அடிவாரம்

மலை அடிவாரத்தில் சயசிங்கு இருந்த **அரண்மனை** இருந்தது என்பது அங்குள்ள சிதைவுகளால் அறியக்கிடக்கின்றது. அதற்கு எதிரில் **குதிரை லாயங்கள்** அமைந்த மண்டபம் மிகப்பெரிய அளவில் இருக்கிறது. 100 அடி நீளம் 80 அடி அகலம் 50 அடி உயரம் உள்ள களஞ்சியம் ஒன்று இருக்கிறது.அது மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது ஏனை இரண்டிற்கும் இடையில் உள்ள பிரிவில் இரண்டிற்கும் செல்லத்தக்க மூன்று செங்கற் படிக்கட்டுகள் அமைந்துள்ளன. செங்கல் மண்டபம் சதுரவடிவில் அமைந்துள்ளது. களஞ்சியத்துக்கு எதிரே உள்ள பாறையில் பிள்ளையார் உருவம் செதுக்கப்பெற்றுள்ளது. மூன்று மண்டபங்கள் வரிசையாக இருக்கின்றன. தூண்கள் கற்களால் ஆனவை; மேற்கூரை முதலியன செங்கற்களாலும் சுண்ணும்பாலும் ஆகியவை. அதன்மீது 5 அடி உயரமுள்ள செங்கற் கோபுரங்கள் ஒவ்வொரு தூணுக்குமேலும் இருக்கின்றன. இவ்வேலைப்பாடு இரண்டு மண்டபங்கள் மீதே காணப் படுகின்றன. **நெய்க்கிணறு** ஒன்று சதுரவாயுடன் காண்கிறது. அதன் நீளம் 35 அடி; அகலம் 30 அடி. முரசு வைத்து அடிக்கிற **மேடை** ஒன்று 20 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 80 அடி நீளமும் 70 அடி அகலமும் 40 அடி உயரமும் உள்ள **உடற்பயிற்சி மண்டபம்** ஒன்று இருக்கிறது. அதன் சாளரங்கள் சிறிய அளவுடையன. கட்டடத்தின்மீது

கோவில் விமான வேலைப்பாடுகள் நிரம்பக் காண்கின்றன. ஆனைக்குள மண்டபம் என்னும் பெயருடைய ஒரு குளம் சுற்றிலும் மண்டபங்களைப் பெற்றுள்ளது. அவை அங்கங்கே இடிந்திருக்கின்றன. அரசி நீராடும் கல்மேடை ஒன்று காண்கிறது. அதன் எதிரே படிக்கட்டுகள் மேல் நோக்கிச் செல்லலையும் அவை மண்மேட்டில் புதைந்து கிடத்தலையும் நோக்க, அம்மண்மேடே இராணியின் அந்தப்புரமாக இருந்திருத்தல் வேண்டும் என்று கருதுதற்கு இடமுண்டாகிறது. அதற்கு எதிரில் 6 அடுக்குகள் கொண்ட கோபுரம் இருக்கிறது. அதன் பெயர் கல்யாண மகால் என்ப தாம். அது சில இடங்களிற் பழுதுபட்டுக் கிடக்கிறது. 'பாண்டு வாத்திய' மேடை ஒன்று 80 அடி நீளமும் 50 அடி அகலமும் 30 அடி உயரமும் உடையதாக இருக்கிறது.

இதுகாறும் கூறியவற்றைத்தன் அகத்தேகொண்ட மலையடிவாரத்தை மதிற்சுவர் ஒன்று அகழிவரை பரவி நிற்கிறது. அதற்கு வலப்பால் ஐந்து சிறு கோவில்கள் பாழ்நிலையில் இருக்கின்றன. அவை மகாபலிபுர இரதங்கள் போன்றவை. இவற்றிற்கு வர மலையிலிருந்து படிக்கட்டுகள் இருக்கின்றன. அங்கு மண்டபம் ஒன்று இடிந்து, ஒரு தூண் மட்டுமே நின்று காட்சி அளிக்கிறது. சிறிது அப்பாற் சென்றால், ஒரு பாறைமீது பெரிய அநுமன் உருவம் செதுக்கப்பட்டுளது. அதற்குப் பூசை பலமாக நடக்கிறது; விழாவும் நடக்கிறதாம். அதன் பின்புறமும் முன்புறமும் மலையடிவாரங்களில் பெரிய நீர் நிலைகள் இருக்கின்றன; படித்துறைகள் இருக்கின்றன.

(தொடரும்)

# திருப்புறம்பயக் கல்வெட்டுக்கள்

திரு. T. V. சதாசிவப்பண்டாரத்தார் அவர்கள், ஆராய்ச்சியாளர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

திருப்புறம்பயம் என்பது காவிரியாற்றிற்கு வடபாலுள்ள பாடல் பெற்ற சோழநாட்டுச் சிவத்தலங்கள் அறுபத்து மூன்றனுள் ஒன்றாகும். சைவசமய குரவர் நால்வராலும் பாடப்பெற்ற சிறப்புடைய இவ்வூர், கும்பகோணத்திற்கு வடமேற்கே ஐந்துமைல் தூரத்தில் மண்ணியாற்றின் வடகரையில் உள்ளது. இதில் முதலாம் ஆதித்த சோழனால் கற்றளியாக எடுப்பிக்கப் பெற்ற பழமைவாய்ந்த சிவாலயம் ஒன்று இருக்கின்றது. அதில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. அவையனைத்தும் பல வரலாற்றுண்மைகளை உணர்த்தும் சிறப்புடையனவாகும். அரசாங்கக் கல்வெட்டிலாகா அலுவலாளர்களும் அவற்றைப்படியெடுத்துப் போயிருக்கின்றனர் அவற்றுள், பன்னிரு கல்வெட்டுக்கள் மாத்திரம் 'தென்னிந்தியர் கல்வெட்டுக்கள்' ஆறும் தொகுதியில் அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டிருக்கின்றன. யானும் சில கல்வெட்டுக்களை நம் 'பொழிலில்' முன்னர் வெளியிட்டுள்ளேன். வெளிவராத மூன்று கல்வெட்டுக்களை இதுபோது தருகின்றேன்.

I

இடம் :—கர்ப்பக்கிரகத்தின் மேற்புறம்.

காலம் :—கங்கைகொண்ட சோழன் காலம்.

(1) ஆலூரின் மாநிழற்கீ ழிருந்தறமுன் பகர்ந்த அணிதிகழ்தென்
புறம்பியத்து ளா(2)னுக் காக

நாலூர்கோன் ருயனிகழ் வரியிலிடு வித்து நலந்திகழ்கற்
பொறிப்பித்தோன்(3)களிர்மென் கொங்கை

பாலூர்சொல் லியர்வேளுத் தமசோழத் தமிழப்(4)பலவரையன்
கலைகள்பயி லெமதரு பாதம்

சேலூர்பைம் புனல்வயலுஞ் செறிபொழி(5)லுஞ்சுலவும் சிலைமதில்சூழ்
மணிமாடச் சிறையூரா திவனே.

**குறிப்பு :**—இக்கல்வெட்டு ஒரு விருத்தப்பாவாக உளது. எழுத்தமைதியைக் கொண்டு நோக்குங்கால் இது முதலாம் இராசேந்திர சோழனெனப்படும் கங்கைகொண்ட சோழன் காலத்தியது என்பது இனிது புலப்படா நிற்கும். இவ்வேந்தற்கு உத்தம சோழனென்ற பெயரும் உண்டு. எனவே, இக்கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ள தலைவனும் உத்தமசோழத் தமிழப் பல்லவரையன் என்ற பட்டம் பெற்றிருப்பது

இவன் கங்கைகொண்ட சோழன் காலத்திலிருந்த அதிகாரிகளுள் ஒருவன் என்பதை நன்கு புலப்படுத்துகின்றது. இவன் சிறையூரினன்; அருபாதம் என்னும் பெயரினன்; கலைகள் பயின்றவன். இவன் புறம்பயத்திறைவற்கு இறையிலி நிலம் அளித்த செய்தியை இக்கல்வெட்டு அறிவிக்கின்றது.

## II

இடம் :— மகாமண்டபத்தின் தென்புறம்.

காலம் :—மூன்றாங் குலோத்துங்க சோழன் காலம்.

(1) ஸ்வஸ்திஸ்ரீ திருப்பேரம்பலம் பொன்வேய்ந்தரு(ளி)(2)ன திரிபுவன சக்ரவ(ர்)த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர் (3)க்கு யாண்டு எவது வடகரை விக்கி(ர)ம சோழவளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்து திருப் (4) புறம்பியத்து இருக்கும் ஆலங்குடையான் அடிகள் புறம்பியனும் அயிற் (5) காடுடையான் சூற்றி திருச்சிற்றம்பல முடையானும் இவ்விருவோம் உடையார்க்கு திங்கள் அமா(6)வாசி அமுதுசெய்தருள அமாவாசி ஒ...க்கு ஆளுடைய நாயனார்க்கும் திருப்பள்ளியறை நா(7)ச்சியார்க்கும் சென்னல் திருவமுது அரிசி பதக்கு................நெல் எழுகுறுணி (8) நாநாழியும் கூத்தாடுந்தேவர்க்கும் பிராட்டியார்க்கும் (ஆக) திருவமுது அரிசி அறுநாழியும் பி(9)ள்ளையார் முத்துமுளைக்கன்றுக்கு திருவமுது அரிசி நானாழியும் பிள்ளையார் அறம்பயந்த பிள்ளை(10)யார்க்கு திருவமுத அரிசி நாநாழியும் ஆக பூரித்தரு.........திரு அமுது குறுணி அறுநாழி(11)க்கும் இரண்டஞ்சான நெல் தூணி முந்நாழியும் கறிவிறகு உள்ளிட்ட விஞ்சனங்(12)களுக்கு நெல் தூணி பதக்கும் ஆக நாள் +க்கு நெல்கலத்து முக்குறுணியாக அமாவா(13)சி மஉக்கு வேண்டு நெல் மஎ கலனே தூணிபதக்குக்கு கொல்லை திருத்தி(14)விட்ட நிலமாவது ஓடேந்து செல்வர் வாய்க்காலுக்கு மேற்(15)கு திருவாதிரைப் புறத்து விளை நிலத்துக்கு தென்கிழக்கு கொல்லை(16)..........க்குப் பழவரிசைப்படி நெல் ரு கலத்துக்கு இந்நிலம் இரண்டு(17)மாக்காணியும் திருத்தறத்திருத்தி வரிசை இட்ட நெல் உம... கலனே முக்குறுணியில் 18) கொல்லை......வரிசைக்கு வேண்டும் நெல் நீக்கி நின்ற நெல் மஎ கலனே ஐங்குறுணி (19)..........க்கு ஆட்டு அமாவாசி மஉக்கும் புகட்டின நிபந்தங்கட்டியபடி உடையார் (20) திருப்புறம்பிய முடையாற்கு சந்திராதித்தவல் செல்லக் (21) கடவதாக நிபந்தங் கட்டிப் பன்மாயேஸ்வர ரக்ஷையாக நிபந்தங்(22)கட்டிவிட்டார்கள் ஆலங்குடையானும் அயிற்காடுடையானும் நன்றாக.

குறிப்பு :—இது இரண்டாங் குலோத்துங்க சோழன் காலத்துக் கல்வெட்டு என்று அரசாங்கக் கல்வெட்டிலாகா அலுவலாளர்கள் எழுதியுள்ளனர். ஆனால், இதுமூன்றாங்குலோத்துங்கசோழன்காலத்தியது ஆகும். இவ்வேந்தன் காலத்திலிருந்த ஆலங்குடையான் அடிகள் புறம்பியனும்

அயிற்காடுடையான் ஆற்றித் திருச்சுற்றம் பலமுடையாலும் திருப்புறம் பய ஆலயத்தில் எழுந்தருளியுள்ள ஆளுடைய நாயனர் (சோமாஸ்கந்தர்) திருப்பள்ளியறை நாச்சியார், கூத்தாடுங்தேவர், பிராட்டியார், பிள்ளையார் முத்துமுளைக்கன்று, அறம்பயந்த பிள்ளையார் ஆகிய கடவுளர்க்கு அமாவாசை தோறும் கறியுடன் திருவமுது வைத்து நிவேதனம் செய்தற்கு நிபந்தமாக நிலம்விட்ட செய்தியை இது கூறுகின்றது. இக்கல்வெட்டில் நடராசப்பெருமான் கூத்தாடுந்தேவர் எனவும் பிக்ஷாடனர் ஓடேந்துசெல்வர் எனவும் குறிக்கப் பெற்றிருப்பது அறியற்பாலதாகும். நடராசர் என்ற சொற்றொடர், பழைய கல்வெட்டுக்களில் காணப்படாமையால் அது பிற்கால வழக்கேயாம். இக்கல்வெட்டில் குறிக்கப்பெற்ற பேரம்பலம் பொன்வேய்ந்த குலோத்துங்க சோழன் காலத்தில் தான் திருத்தொண்டர் புராணத்தின் ஆசிரியராகிய சேக்கிழார் அடிகள் இருந்தனர். இவ்வடிகள் காலம் பின்னர் வெளியிடம் பெறும்.

## III

இடம் :—திருச்சுற்றுமாளிகைக் கோபுரவாயிலின் மேற்புறம்.

காலம் :—விசயநகரவேந்தனன வீரப்பிரதாப தேவராயன் காலம்.

(1) சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமந் மஹாமண்டலேஸ்வரன் ஹரியராயர் விபாடன் பாஷைக்கு தம்புவராயர் கண்டன் மூவராயர்கண்டன் கண்ட நாடுகொண்டு கொண்டநாடு கொடாதான் பூர்வதக்ஷிண பச்சிம உத்தர சது சமுத்ராதிபதிஸ்ரீ வீரப்ராதப தேவராயர் ப்ருதிவி ராஜ்யம் பண்ணி அருளாநின்ற சகாத்தம் ஹச...மேல் செல்லா நின்ற (2) விசுவாவசு சம்வத்சரத்து மீன நாயிற்று பூர்வபட்சத்து பஞ்சமியும் சோமவாரமும் பெற்ற புனர்பூசத்துநாள் ஸ்ரீமந் மஹாமண்டலேஸ்வரரான நராதீஸ்வரவராதிசுர பட்டு கட்டாரி ராய வசவசங்கம மதியாத மன்னர் மணவாளன் கோனேரி தேவ மகா இராஜா விக்கிரம சோழவளநாட்டு இன்னம்பர்நாட்டு அண்டாட்டுக் கூற்றத்து நின்று நீங்கிய தேவதானம் திருப்புறம்பியத்து (3)உடையார் திருப்புறம்பியமுடைய தம்பிரானுர் மகபூசைகொண்டருள வேணும் என்று சருவமானியம் ஆக கல்வெட்டினபடி நயினர் திருப்புறம்பியமுடைய நயினுற்கு பல இடத்திலும் பதிந்து நாளதுவரையும் நடந்து வருகிற திரு நாமத்துக் காணி திருப்புறம்பியம் சோழசெவிடு நிலமும் கண்ணங்குடி கிழைக்கண்ணங்குடியில் விடுநிலம் சேர்வையான நிலமும் (4) கோற்பற்று ஆலத்தூர் மேடும் மேற்காவேரிபற்று கருப்பூர் சிலசிந்தாமணியும் வேம்பற்றூர் பத்தாங்கட்டளையும் இடவகைப்பற்று ஏறுபாடியான பேட்டையும் சிற்றூர் சிதடக்குடி இந்த ஊர்களுக்கு இறைகரத்தில் கொள்ளும் அட்டவணை புறவரி குலவரி நாட்டுவரி.........கை கோட்டைக் காணிக்கை குருதைக் காணிக்கை கற்பூரகாணிக்கை அதிகாரி கொடிக் (5)காணிக்கை தேரடி இரவதவற்தனை ஆவதரவற்தனை மல்லைய மகம்

மாதம் நிலவழி குடிவழி அரசுப்பேறு சாதிவரி...இநவரி பறைவரி துண்ட காணிக்கை மற்று நாட்டுக்கு வாசலில் பூணும் பழவரி புதுவரி உட்பட சந்திராதித்தவரையும் (6) சருவமானியமாக கல்வெட்டினபடியாலே மக பூசை திருப்பணி நடத்தக் கடவதாகவும் இந்த சருவமானியத்துக்கு விபரீதம் பண்ணினவர்கள் கங்கைக்கரையிலே காராம்பசுவைக் கொன்ற பாவத்திலே போகக்கடவர்கள் ஆகவும் இக்கட்டளை.

குறிப்பு :—இக்கல்வெட்டில் சகாப்தத்தைக் குறிக்கும் இரண்டு எழுத்துக்கள் சிதைந்தமையால் ஆண்டு புலப்படவில்லை. எனினும், இதில் வந்துள்ள ஆண்டின் பெயர், திங்கள், பக்கம், திதி, நாள் இவற்றைக் கொண்டு ஆய்ந்து பார்க்குங்கால் இதில் குறிக்கப்பெற்றுள்ள காலம். ‘கி. பி. 1485 மார்ச்சு 21’ என்பது காலஞ்சென்ற பேரறிஞர் திவான் பகதூர் L. D. சாமிக்கண்ணுப்பிள்ளை அவர்கள் எழுதிய Indian Ephemeris’ என்ற நூலால் வெளியாகின்றது. ஆகவே, விசயநகர வேந்தர்கள் தமிழகத்தை அரசாண்ட காலப்பகுதிக்குள் இஃது அடங்கி நிற்றல் காண்க.

இனி, இக்கல்வெட்டினுல் உணரப்படும் கோனேரி தேவமகாராசன், விசயநகரவேந்தனை விருபாட்சராயனுக்குப் பிரதிநிதியாய்த் தமிழ் நாட்டை ஆட்சிபுரிந்தவன். இவன், காளமேகப் புலவர் காலத்திலிருந்த சாளுவத்திருமலைராயனுக்குப் பின்னர் இத்தமிழகத்தில் இருந்தவன். இவன், வசவசங்கமன் என்ற பட்டமுடையவனுக இருத்தலால் வீர சைவனுயிருத்தல் கூடும். திருவரங்கத் திருப்பணிகளைப் பற்றிய கோயி லொழுகு என்ற வைணவ நூலில் இவன் திருவானைக்காவிலிருந்த சைவர் களோடு சேர்ந்துகொண்டு திருவரங்கத் திருமாலுக்குத் தீங்கிழைத்தா னென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அன்றியும், அக்கோயிலிலிருந்த உயர்ந்த ஆடை அணிகலன்களை யெல்லாம் இவன் கவர்ந்துகொண்ட தோடு கோவிலுக்குரிய கிராமங்கள் பலவற்றைப் பிடுங்கித் தன் கீழிருந்த தண்டநாயகனிடம் குத்தகைக்குக் கொடுத்துவிட்டான் என்றும் அந்நூல் கூறுகின்றது. இவன் வீரசைவனுதலால் ஒருகால் அவ்வாறு நிகழ்ந் திருக்குமோ என்ற ஐயம் உண்டாகின்றது. ஆனல், திருவரங்கத்திலுள்ள சொக்கப்பனைவாசல் கோபுரக் கதவுகளை இவன் அளித்தனன் என்று ஒரு கல்வெட்டு அறிவிக்கின்றது. (Ins. No. 115 of 1937—38) திருச்சிராப் பள்ளி சில்லாவிலுள்ள அன்பில் வடிவழகிய பெருமாளுக்கு, கி. பி. 1478ல் இறையிலியாக நிலம் விட்டிருப்பவனும் அப்பெருமாள் கோயிலில் தன் பெயரால் ‘சங்கமராயன் திருமண்டபம்’ என்ற மண்டபம் ஒன்று கட்டிய வனும் ஆகிய சாளுவ சங்கம தேவமகாராசன் இக்கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ள கோனேரி தேவமகாராசனுயிருத்தல் வேண்டும் என்று கருதற்கிடமுளது. அங்ஙனமாயின் இவனை வைணவ சமயத்திற்குத் தீங்கிழைத்தவன் என்று கூறுவது பொருந்தாததாகும்.

இனி, இவன் சிவபெருமானிடத்தில் சிறந்த பத்தியுடையவன் என்பது சில கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது. திருச்செங்காட்டங்குடித் திருக்கோயிலுக்கு அவ்வூரிலிருந்து அரசாங்கத்திற்குக் கிடைத்தற்குரிய வரிகளை அளித்துள்ளான் என்று தெரிகிறது. (Annual Report on South Indian Epigraphy for the year 1912—13, para 72) இவன், திருச்செந்துறைத் திருக்கோயிலுக்கு கி. பி. 1492-ல் நிலவரிகளை நீக்கிய செய்தி அவ்வூரிலுள்ள ஒரு கல்வெட்டால் அறியக்கிடக்கின்றது. (Ins. No. 145 of 1937—38).

இவன், திருப்புறம்பயத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு மகவிழா நடத்தும் பொருட்டு, அரசாங்கத்திற்கு அக்கோயிலிலிருந்து ஆண்டுதோறும் கிடைத்துவந்த நிலவரியை கி. பி. 1485-ஆம் ஆண்டில் தள்ளிக்கொடுத்ததோடு கோயிலுக்குரிய ஊர்களில் வாங்கப் பெற்றுவரும் பிறவரிகளையும் கோயிலதிகாரியே வாங்கிக்கொள்ளுமாறும் கட்டளையிட்ட செய்தி இக்கல்வெட்டினால் புலனாகின்றது. இவ்வரிகளால் கிடைக்கும் பொருளைக் கொண்டு புறம்பயத் தெம்பெருமானுக்கு மகவிழா நடத்துமாறு இவன் ஏற்பாடு செய்திருப்பதால் இவன் காலத்தில்தான், திருப்புறம்பயத்தில் மகவிழா முதலில் தொடங்கப்பெற்றிருத்தல்வேண்டும் என்பது தெள்ளிது. எனவே, கி. பி. 1485-ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் இவ்வூரில் மகவிழா நடைபெற்று வருகின்றது எனலாம். சோழமன்னர் ஆட்சிக்காலங்களில் இவ்வூரில் தைப்பூச விழாவும் பங்குனித்திருநாளும் நடைபெற்றுவந்தன என்பது வேறொரு கல்வெட்டினால் அறியக்கிடக்கின்றது. இக்காலத்தில் **மகவிழா மாத்திரம்** நடைபெற்று வருகின்றது. எஞ்சிய இருவிழாக்களும் நடைபெறவில்லை. மகவிழா தொடங்கப்பெற்ற பின்னர் அவ்விரண்டும் நிறுத்தப்பட்டனபோலும்.

இக்கல்வெட்டில் விசயநகரவேந்தன் வீரமும் புகழும் வரையப் பெற்றிருப்பதோடு அக்காலத்தில் அரசாங்கத்திற்கு மக்கள் கொடுத்துவந்த பல்வகை வரிகள் குறிக்கப்பட்டிருப்பதும் அறியத்தக்கவாகும். திருப்புறம்பயத்திலுள்ள கல்வெட்டுக்களுள் இஃது ஒன்றே விசயநகரவேந்தன் காலத்தது ; மற்றையன சோழமன்னர்களின் காலத்தனவாகும்.

86

# நன்கொடைகள்

## 1943—சனவரி

### தமிழ்ப்பொழில்

| | |
|---|---|
| உயர்திரு. செட்டிநாட்டரசர், பேரறிஞர், வீரத்திரு, மு. அ. அண்ணாமலைச்செட்டியார் அவர்கள் | 150—0—0 |

### புலவர் கல்லூரி

| | |
|---|---|
| திருச்சி, இராவ் சாகிபு திரு. பெ. கோவிந்தராசபிள்ளை அவர்கள் | 100—0—0 |
| கரந்தை, திரு. அ. சினகுமாரமுதலியார் அவர்கள் | 0—8—0 |

### ஏழை மாணவர் நிதி

| | |
|---|---|
| கரந்தை, திரு. வ. மருதப்பாபிள்ளை அவர்கள் | 100—0—0 |

### சங்கம்

| | |
|---|---|
| திரு. P. A. பொன்னுசாமிபிள்ளை அவர்கள், திருச்சி | 0—1—6 |

### தமிழவேள் நினைவு

| | |
|---|---|
| 1942, டிசம்பர் முடிய வரவு | 206—0—0 |
| திரு. தி. இராதாகிருட்டின நாயுடு அவர்கள், தஞ்சை | 5—0—0 |
| ,, C. கனகசபைச் செட்டியார் அவர்கள், மாயவரம் | 2—0—0 |
| ,, K. S. வெங்குச் செட்டியார் அவர்கள் ,, | 2—0—0 |
| ,, M. A. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் ,, | 2—0—0 |
| ,, S. இரத்தனம்பிள்ளை அவர்கள் ,, | 2—0—0 |
| ,, N. முத்தையமுதலியார் அவர்கள் ,, | 1—0—0 |
| ,, R. K. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் ,, | 1—0—0 |
| ,, K. வேங்கடேசபிள்ளை அவர்கள், B.A., L.T. ,, | 1—0—0 |
| ,, T. V. அரங்கசாமித்தேவர் அவர்கள், B.A., L.T. ,, | 1—0—0 |
| ,, S. தங்கவேல்பிள்ளை அவர்கள், B.A., L.T. ,, | 1—0—0 |
| ,, S. சுப்பையா முதலியார் அவர்கள், குற்றாலம் | 1—0—0 |
| ,, Dr. P. V. தேவராசமுதலியார் அவர்கள், திருப்பாதிரிப்புலியூர் | 5—0—0 |
| ,, தி. கி. நாராயணசாமிநாயுடு அவர்கள், கிழக்குமருதூர் | 5—0—0 |
| ,, கா. இராமநாதஞ்செட்டியார் அவர்கள், சென்னை | 2—0—0 |
| ,, லெ. மாணிக்கம்செட்டியார் அவர்கள், வேகுப்பட்டி | 1—0—0 |
| ,, வ. ஆதிநாதபிள்ளை அவர்கள், வேகுப்பட்டி | 1—0—0 |
| ,, K. A. P. விசுவநாதபிள்ளை அவர்கள், திருச்சி | 100—0—0 |

### இராதாகிருட்டினத் தொடக்கப் பள்ளி

| | | |
|---|---|---|
| 27— 3—42 | அரசியலார் நன்கொடை | 789— 0—0 |
| 19— 6—42 | ,, | 329—11—0 |
| 1— 9—42 | ,, | 339—11—0 |
| 3—12—42 | ,, | 349—11—0 |

## சங்க வெளியீடுகள்

| | ரூ. அ. பை. | அஞ்சல். |
|---|---|---|
| ...ந்நியாசங்கள் | 0 8 0 | 0 1 6 |
| ...விப்பயிற்சிக்குரியது தாய்மொழி | 0 1 0 | 0 0 9 |
| ...ஞ்ஞானத்தின் வழக்கீடு (செலவாகி விட்டது) | | |
| ...ளிர் வரலாற்றின் ஆராய்ச்சி | 0 3 0 | 0 0 9 |
| ...ரோர் | 0 10 0 | 0 1 6 |
| ...லர் | 1 10 0 | 0 1 6 |
| ...ால்காப்பியம்-சொல்-தெய்வச்சிலையார் உரை | 2 8 0 | 0 3 9 |
| ...திகாரம்-புகார் காண்டம் (மூலமும் குறிப்பும்) | 0 4 0 | 0 0 9 |
| ...லை வருக்கக் கோவை | 0 1 0 | 0 0 9 |
| ...தாந்தாதி (உரையுடன்) | 0 1 0 | 0 0 9 |
| ...ந்தைக் கட்டுரை (வெள்ளி விழா வெளியிடு) | 5 0 0 | 0 9 3 |
| ...ந்தைக் கட்டுரைக்கோவை | 1 0 0 | 0 1 6 |
| ...ருதிவீணை | 0 4 0 | 0 0 9 |
| தமிழரசி குறவஞ்சி (அச்சில்) | | |
| உழைப்பால் உயர்ந்த ஒருவர் (அச்சில்) | | |
| *நால்வர் நான்மணிமாலை | 0 1 0 | 0 0 9 |

*சங்க வெளியீடுகளை வாங்குவோர்க்கு ஒருபடி விலையின்றி தரப்பெறும்

## பிற வெளியீடுகள்.

| | |
|---|---|
| தமிழிலக்கிய வரலாறு | 2—8—0 |
| திருமுறைத்திரட்டு | 1—8—0 |
| அப்பர் புகழ்மாலை | 0—4—0 |
| சுந்தரர் புகழ்மாலை | 0—4—0 |
| ...ந்தரமூர்த்தி நாடகம் | 0—4—0 |
| ...மிழ் கற்பிக்கும் முறை | 0—8—0 |
| ...வராற்றுப்படை | 0—4—0 |
| ...வெம்பாவை | 0—1—0 |
| ...னமஞ்சரி | 0—8—0 |
| ...e Golden book of English Poetry—(Junior) | 0—8—0 |
| Do. (Senior) | 1—0—0 |

அஞ்சற் செலவு வேறு

Regd. No. M 4192

உ

தமிழ்த்தாய் வாழ்க

# கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

## சங்க உறுப்பினர்.

திங்கள் வரி—குறைந்தது நாலணா. ஆயுள் வரி ஐம்பது ரூபா.

## நூல்நிலைய உறுப்பினர்.

சங்க உறுப்பினர்க்கு அரையாண்டிற்கு எட்டணா. பிறர்க்குச் சேர்ப்புக்கட்டணம் எட்டணா; திங்கள் வரி நாலணா.

## தமிழ்ப் பொழிலின் கையொப்பம்.

| முன் பணம் | உள்நாடு. | | | வெளிநாடு. | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
| ஆயுள்வரி | ௨௫ | 0 | 0 | ௨௫ | 0 | 0 |
| ஆண்டுவரி: | | | | | | |
| சங்க உறுப்பினருக்கும் மாணவர்க்கும் | ௨ | 0 | 0 | ௨ | ௮ | 0 |
| ஏனையர்க்கு .... | ௩ | 0 | 0 | ௩ | ௮ | 0 |

## பழந்தொகுதிகள்—குறைந்த விலை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1, 2, 4–8 தொகுதிகள் | தொகுதி ஒன்று | ரூ. | ௧ | 0 | 0 |
| 3, 11—16 தொகுதிகள் | தொகுதி ஒன்று | ரூ. | ௩ | 0 | 0 |
| 9, 10 தொகுதிகள் நீங்கலாக 1 முதல் 15 முடிய 13 தொகுதிகளை மொத்தமாக வாங்கினால் | | ரூ. | ௨௰ | 0 | 0 |

(அஞ்சற் செலவு வேறு)

**9, 10, 17 தொகுதிகள் செலவாகி விட்டன.**

குறிப்பு:—தமிழ்ப் பொழில் ஒவ்வொரு ஆங்கிலத் திங்கள் 21-ஆம் நாளே குறைந்த அஞ்சற்செலவில் அனுப்பப்பெறுவது. பிறநாட்களில் அனுப்பும்படி வேண்டுபவர் முழு அஞ்சற்றொகையை ஏற்றுக்கொள்ளல்வேண்டும்.

---

வெளியிடுவோர் :—

கரந்தைக் கவியரசு, R. வேங்கடாசலம்பிள்ளை,

கரந்தை, தஞ்சை.